சுவடி : 45
ஓலை : 04

# தென்மொழி

தி.பி.2044 மேழம் (ஏப்பிரல் 2013) விலை : உரு - 10.00

**மலேசியாவில் பாவலரேறு ெ 80ஆவது ஆண்டு விழா ! - கனிச்சாறு நூல் வெளியீடு !**






மறைமலையடிகள் நூல் வெளியீட்டு விழா

## தூயதமிழ் இலக்கியத் திங்களிதழ்

Vol. 45 No.:04 APRIL 2013 Price :Rs.10.00

# தமிழில் வடசொற்கள்

மொழியறிவு துளியுமிலாக் குழுவின் பாலே
முத்தமிழை ஒப்படைத்தே, ஆராய்ந்தின்னும்,
வழிவகைகள் செய்திதனைத் தமிழாட்சிக்கு
வணங்குகின்ற மொழியாகச் செய்வீரென்று
பழிவாங்கிக் கொண்டார் இந் நாட்டை ஆள்வார்!
பைந்தமிழ்க்குத் தீங்கு செய்தார்; நஞ்சைச் சேர்த்தார்!
விழியற்ற அறுவர்போய் யானைகண்ட
வினைதவிர வேறென்ன? உணர்வீர் நன்றே!

சந்தோஷம் என்பதற்கு 'ஷ' வேண்டுமாம்;
ஜனநாயகத்திற்கு 'ஜ' தேவையாம்;
சிந்தித்துப் 'புஸ்தகத்'தை 'அக்ஷரத்'தைச்
சொல்லுங்கால் 'ஸ' வேண்டுமாம் 'க்ஷ'வும் வேண்டும்!
இந்தவெழுத் தெல்லாம்நம் தமிழில் சேர்ந்தால்,
இந்நாட்டைத் தமிழ்ஆளத் தகுதி யாகும்!
'விந்தை'யல்ல! ஆராய்ச்சி! மொழியாராய்ச்சி!
வெள்ளெலும்பு கண்டார், வெள் ளெலும்பே கண்டார்!
குழுமுடிவைக் கேட்டிருந்த அமைச்ச ரெல்லாம்
'கோணல் முடிவல்ல' 'நல்ல முடிவே' என்றார்!
எழுமுடிவு வேறென்ன? அமைச்ச ரென்றால்
எழுத்துப்பற்றி ஆராய்ச்சி எதற்கு வேண்டும்?
குழுமுடிவோ? யார் முடிவோ? அமைச்சர்க் கெல்லாம்
கொண்ட முடிவே முடிவு! நம்மனோர்க்குக்
கழுநீரா ஓடுவது உடலில்! தீங்கைக்
கண்ட பின்னும் பிணம்போல இருப்பதற்கே!

'மகிழ்ச்சி' எனும் சொல்லிருக்கச் 'சந்தோஷம்' ஏன்?
மக்களர சிருக்க 'ஜனநாயக' மிங்கேன்?
புகழ்ச்சி பெறும் 'நூல்' இருக்க 'புஸ்தக'மிங்கேன்?
(புத்தகமும் தமிழ்ச்சொல்லே! போந்து மூலம்)
இகழ்ச்சிதரும் 'அக்ஷர'மேன் 'எழுத்'திருக்க!
'இழிமலடி' வெறுவயிறி வடவர் மூளி
புகழ்ச்சிபெறும் மங்கைக்குத் தருமாம் பிள்ளை;
பைந்தமிழ்த்தாய்க் காணையிட்டு நிற்பீர் மக்காள்!

– பாவலரேறு 1960

முகப்பு அட்டையில்

1. கோலாலும்பூர் துன் சம்பந்தன் – சோம அரங்கில் கனிச்சாறு நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் திரு.க.திருமாவளவன்
நூல் வெளியிட, பெறுபவர் அம்பாங்கு சுப்பிரமணியம் உடனிருப்போர் மறை.தி.தாயுமானவன், மா.பூங்குன்றன், பாவலர் சீரியநாதன்.

2. ஈப்போவில் நடந்த மறைமலையடிகள் வரலாறு – நூல் வெளியீட்டு விழாவில் பேராக்கு மாநில முதல்வரின் அறிவுரைஞர்
டத்தோ வீரசிங்கம் நூல் வெளியிடும் நிகழ்ச்சியில் பாவலர் அருள் ஆறுமுகம், மறை.தி. தாயுமானவன், மா.பூங்குன்றன் ஆகியோர்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

*(நிறுவனம் தி.பி.1990 (1959)*
*நிறுவனர்:* **பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

**தென்மொழி**
மொழி - இனம் - நாடு

**நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!**

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும்வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது; மதப்பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களைவிட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலைதான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

**சுவடி: 45 | தி.பி.உ0சச மேழம் (ஏப்பிரல் 2013) | ஓலை : 4**

# இந்திய அரசும் தமிழ் இரண்டகர்களும் !

## தேசிய இனங்களின் மொழிகளை முற்றுமாகப் புறக்கணிக்கும் இந்திய அரசு

இந்தியாவிலுள்ள அனைத்துத் தேசிய இனங்களின் மொழி, இன அடையாளங்களை இந்திய அரசு என்றைக்கும் சமமாகக் கையாண்டதில்லை. இந்திக்குத் தேசியமொழி என்கிற நிலையைக் கொடுத்து அதன் வளர்ச்சிக்குப் பல்லாயிரங்கோடிப் பணம் செலவழிக்கப்படுகிறது. ஆனால், இந்தியக் கட்டமைப்பில் இருக்கும் பல்வேறு இன மக்களின் தாய்மொழியையும் அதே அளவில் முன்னேற்றமடையச் செய்ய வேண்டும் என்று துளியளவும் அக்கறை கொள்வதில்லை.

அறிவியல் வளர்ச்சி பெற்றுவரும் இக்காலத்தில் உலகம் முழுவதும் சில ஆயிரம் மக்கள் தொகை கொண்ட சிறு நாடுகள்கூட தத்தம் தாய்மொழியை உலகத்தரத்தில் – கணினியில் முன்னேற்றிக் கொள்கின்றன. அதன்வழி உலகின் எந்தப் பகுதியிலும் ஒரு செய்தி உருவான போதும் சில நொடிகளில் கணினிவழி தத்தம் தாய் மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு அந்தந்த மொழி சார்ந்த மக்களைச் சென்றடையும் வண்ணம் ஏந்துகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தியாவில் ஒவ்வொரு மொழியும் 5 கோடி, 10 கோடி மக்கள் பேசும் மொழி என்று நிலைபெற்றிருந்தாலும் "வேலைவாய்ப்புப் பெறவேண்டுமானால் உன் தாய்மொழி துளியும் பயன்படாது; இந்தியைப் படி; அல்லது ஆங்கிலத்தைப் படித்துவிட்டு

வெளிநாட்டிற்கு வேலை தேடிப் போ; அல்லது இங்கேயே உள்ள வெளிநாட்டுக்காரனின் குழுமத்தில் வேலை தேடிக்கொள்" என்று கூறிக்கொள்ளும் நிலையில் விடுதலை பெற்று இவ்வளவு ஆண்டுகளானபோதிலும் மக்கள் அடிமைப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனரே தவிர, அம்மக்களின் மொழிகளை வளர்ச்சியடைய விடாமல் சூம்பிய நிலையிலேயே இந்திய அரசு வைத்துள்ளது.

ஆங்கிலத்திற்கு இணையாக மட்டுமல்ல அதற்கு மேலாகத் தத்தம் மொழியில் கணினியில் திறன்பெறத் தகுதியுள்ள அறிஞர்களைப் பெற்றிருந்தும் அத்தனை மொழியினரின் ஆற்றலையும், வரிப்பணத்தையும் இந்தி என்ற ஒரு மொழியின் வளர்ச்சிக்கு மட்டுமே திசை திருப்பிவிட்டு அத்தனை மொழிகளையும் முடமாக வைத்திருக்க முயல்கிறது இந்திய அரசு.

அத்தனை மக்களும் இந்தியை நம்பிக்கொண்டிருக்கவேண்டும்; அதன்வழி இந்தியைப் பயன்படுத்தி இந்திய ஒற்றுமையை உருவாக்கி விடலாம் என்கிற மூடநம்பிக்கையில் திளைத்துக்கொண்டுள்ளது இந்திய அரசு.

இந்தியத் தேசிய இனங்களின் மொழியையும் அவற்றின் பண்பாடு, நாகரிகம், அம்மொழியினர்க்குள்ள மரபறிவு போன்ற அத்தனைத் தனித்த அடையாளங்களையும் வளரவொட்டாமலும் போற்றிக் காத்துக்கொள்ளாமலும் அவை தாமே அழிந்துவிட வேண்டுமென்னும் நோக்கில் இந்திய அரசு முனைந்து செயற்படுகிறது. அதே நேரத்தில் அவற்றை ஆரியவயமாக்கிக்கொண்டு ஆரியத்தில் இருக்கும் சிறப்பில்லாதவற்றையும் சிறப்பென பெரிதுபடுத்திப் பரப்புதற்கு இந்திய அரசு பல கோடிப் பணத்தைச் செலவு செய்துவருகிறது.

## குறைந்துவரும் இந்தித் திணிப்பு எதிர்ப்புணர்வு

இந்திய அரசு இந்தியைத் திணிப்பதும் அதனைத் தமிழக மக்கள் எதிர்ப்பதுமான போராட்டம் நெடுங்காலமாக நிகழ்ந்து வருகிறது. வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாமல் இந்தியைத் திணிப்பதில் இந்திய அரசு முனைப்புக்காட்டத் தவறுவதேயில்லை. 1964இல் மாணவர்கள் வாயிலாக இந்தியெதிர்ப்பு வெடித்தது. அதன் விளைவாக அப்போதே இந்தியை வரவொட்டாமல் நிலையான மொழிக்கொள்கையொன்றைத் தமிழக அரசு வகுத்திருக்க வேண்டும். அப் போராட்டத்தினால் இந்திய அரசின்மீதும் அதை ஆட்சி செய்த கட்சியின்மீதும் ஏற்பட்ட எதிர்ப்பைப் பயன்படுத்தித் தமிழகத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இதைச் சரியாகப் பயன்படுத்தி ஆட்சியைப் பிடித்தத் திராவிடக் கட்சியினர் சரியான மொழிக் கொள்கையை நிறுவவில்லை. அன்றே தமிழை அரசு மொழி, அலுவலக மொழி, கல்வி மொழி, வழக்குமன்ற மொழி, வழிபாட்டு மொழி என்று அத்தனை தளங்களிலும் தமிழை நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். அவ்வாறு நடைமுறைப்படுத்தாமைக்குக் காரணம் தமிழகத்தில் அமைந்தது தமிழ் ஆட்சியில்லை; திராவிட ஆட்சி. அவர்களுக்கு இருந்தது ஆங்கிலக் காதல்தானே தவிர தமிழ்க்காதல் அல்ல. தமிழ் மக்களையும் – தமிழுணர்வாளர்களையும் மழுங்கடித்துத் தங்களிடம் வயப்படுத்திக்கொள்வதற்கு மட்டுமே அவர்களுக்கு இருந்த தமிழ்ப்பற்றுப் பயன்பட்டது.

## நேருவின் ஏமாற்று உறுதிமொழி !

“நேருவின் உறுதிமொழியை நடைமுறைப்படுத்து” என்று ஒரு கோரிக்கையை மட்டுமே திராவிடக் கட்சியினர் முன்வைத்தனர். இந்தி பேசாத மாநில மக்கள் இந்தியை ஏற்றுக்கொள்ளும்வரை அம் மாநிலங்களில் ஆங்கிலமே நீடிக்கும் என்கிற நேருவின் உறுதிமொழியே ஓர் ஏமாற்று.

வடமாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஒருவர், “இந்தி பேசாத மக்கள் விரும்பும்வரை ஆங்கிலம் நீடிக்கும் என்று நீங்கள் எப்படி உறுதிமொழி கொடுக்கலாம்?” என்று நேருவுக்கு மடல் எழுதியபோது,

“ஒரு நாளில் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு அவ்விடத்தில் இந்தியைக் கொண்டு வந்துவிடமுடியும். ஆங்கிலமில்லாமல் அந்த இடத்தில் அவரவரின் தாய்மொழி அமர்ந்துவிட்டால் எந்தக் காலத்திலும் அந்த இடத்தைக் கைப்பற்றி இந்தியை அவ்விடத்தில் பொருத்தமுடியாது” என்று விடை கொடுத்ததாக நேருவின் நூலிலேயே குறிப்பு வெளியாகியிருப்பதாக, திரு பழ.நெடுமாறன் அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளார்.

இந்தக் கோரிக்கையைத்தான் திராவிட ஆட்சியினர் பெரியதாக வலியுறுத்திக் கேட்டுக் கொண்டனரேயன்றித் தமிழை வாழவைக்கவோ வளர்க்கவோ எந்த உருப்படியான மொழிக் கொள்கையையும் வகுக்கவில்லை.

## தமிழ் ஒருங்குகுறியில் இரண்டகர்கள்

தமிழைக் கணினியில் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. தமிழைக் கணினிப் பயன்பாட்டுக்குக் கொண்டு செல்வதற்கு முதற் படிநிலை தமிழ் ஒருங்குகுறி. தமிழ் ஒருங்குகுறியில் தமிழ் நெடுங்கணக்கு ஏற்றப்படும்போதே அதில் கிரந்தத்தையும் சேர்க்கத் தமிழ் இரண்டகன் ஒருவன் முற்பட்டான். இரண்டாண்டுகளுக்குமுன் இந்தச் சிக்கல் எழுந்தது.

எதிர்ப்புக் கிளம்பும்போது பின்வாங்கிக்கொள்வதும் வாய்ப்புக் கிடைக்கும்போது இந்தியைத் திணிப்பதும் எவ்வாறு தொடர்கிறதோ, அதேபோல் அடுத்ததொரு வாய்ப்பை ஏற்படுத்திக்கொண்டு ஒருங்குகுறியில் கிரந்தத்தைத் திணிக்க முற்படுகிறார்கள்.

மீண்டும் அமெரிக்கவாழ் பொறியாளரும் பொள்ளாச்சியாரின் கையாளருமான அதே நாக.கணேசன், மைக்கேல் எவர்சன் (Michael Everson) என்ற ஆங்கிலரைக் கைக்கொண்டு, தமிழ் ஒருங்குகுறியில் கிரந்தம் வேண்டும் என்கிற கோரிக்கையை முன்னெடுத்து ஒருங்குகுறி சேர்த்தியத்திற்கு அனுப்பியுள்ளார்.

தமிழ் ஒருங்குகுறி நெடுங்கணக்கில் மாற்றான வரிவடிவங்களைத் திணிக்கச் செய்ய இன்னொரு மொழியாளனுக்கு என்ன உரிமை இருக்கிறது?

தமிழ் நெடுங்கணக்குக்கென்று ஒரு மொழிமரபு இருக்கிறது. அம்மரபின்படி இருந்தால்தான் மொழி காக்கப்படும் என்கிற இலக்கண மரபும் அவ்விலக்கண மரபுக்கு நெடிய வரலாறும் இருக்கின்றன. இதை மாற்றியமைக்க வேற்றுமொழியாளனுக்கு உரிமை இல்லை.

இது தவிர, புதியதாக ஓர் இரண்டகனைத் தேர்வு செய்து அவர் வாயிலாக ஒருங்குகுறி சேர்த்தியத்திற்கு ஒரு பரிந்துரையை அனுப்பச் செய்துள்ளனர்.

**'மறவன் புலவா? - ஊசிப்போன புலவா?'**

தமிழுக்கு இரண்டகம் செய்வதென்றால் 'தமிழறிஞர்கள்' என்கிற போர்வையில் பலர் ஒன்று திரளுகின்றதைக் கண்டபோதுதான் இத்தனை போலிகள் தமிழகத்தில் உலவுகின்றதை அறியமுடிந்தது. பேராசிரியர் மறவன்புலவு **சச்சிதானந்தம்** அவர்கள் 'காந்தளகம்' என்ற பதிப்பகத்தை நிறுவி தமிழையும் சிவனியத்தையும் முன்னெடுத்த நூல்கள் பலவற்றை வெளியிட்ட ஈழத்தமிழர் .

இவரும் தமிழில் கிரந்தத்தைச் சேர்க்கவேண்டும் என்று ஒருங்குகுறிச் சேர்த்தியத்திற்குப் பரிந்துரை மடல் கொடுத்திருக்கிறார் என்கிற செய்தி இப்போது வெளியாகியிருக்கிறது.

மறவன்புலவு சச்சிதானந்தம் அவர்கள் ஒருங்குகுறிச் சேர்த்தியத்திற்கு எழுதிய மடலில், யாழ்ப்பாணப் பதிப்பாளர் கணபதி 'பிள்ளை' அவர்கள் 1952முதல் சிவனிய நூல்களைப் பதிப்பித்தவர் என்றும், அவருக்குப்பின் சென்னையில் தேவாரம் உள்ளிட்ட தமிழ் நூல்கள் பலவற்றைத் தாம் பதிப்பித்ததாகவும் அதைத் தாய்லாந்து மன்னர் குலத்தவர்கள் கிரந்த உதவியுடன் படிக்க விரும்புவதாகவும் தாம் அந்நூல்களை எண்ணியல்பதிப்பு (Digitized) செய்யவிருப்பதாகவும் அத்தமிழ் நூல்களைச் சரியான ஒலிப்பலுக்கலோடு படிக்க( தமிழ் எழுத்துகள் போதா.)க் கிரந்த எழுத்துகளை ஒருங்குகுறி நெடுங்கணக்கில் சேர்த்தாக வேண்டும் என்றும் கூறியிருக்கிறார்.

தாம் பிறந்த தமிழ்க்குடிக்கும் அவர்தம் தந்தையாரின் அரிய தமிழ்ப் பணிக்கும் திருமுறைக் குரவர்களின் தூய தமிழ்ப் படைப்புகளுக்கும், தாம் பிறந்த ஈழ மண்ணுக்கும் இழிவு செய்யும் வகையில் தமிழ்க்கேடு செய்யப்புகும் 'மறவன்புலவு' அவர்கள் தமிழகத்தில் தனக்கிருக்கும் மதிப்பைத் தானே காலில் போட்டு மிதித்துக் கொள்ளும் செயலிது. இத்தகையப் பேரிழிவைத் தேடித்தர முயலும் இவருக்கும் இன அழிவுக்குத் துணைபோன 'கருணா'வுக்கும் என்ன வேறுபாடு?

தமிழ்நாட்டு அறிஞர் பலருக்கும் அவர்தம் அறிவுச் செயற்பாடுகளுக்கு உதவுவதுபோல் அமெரிக்க வாழ் பொறியாளர் நாக.கணேசன் நன்மைகள் சில செய்துகொடுத்துத் தங்கள் வயமாக்கிக் கொள்கிறார் என்றும் கேள்வியுறுகிறோம். தமிழுக்குத் தாம் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் கிரந்தக்கேட்டில் அறிஞர்கள் சிலரையும் உடந்தையாக்கிக்கொண்டுவரும் அவரின் கரவான செயற்பாடு வெளிப்பட்டுவரும் நிலையில் இப்போதாவது அவரைப் புரிந்துகொள்ள வேண்டும்.

..., once Gra... is encoded in Unicode/ISO 10646.

Again, I congratulate the efforts taken by Unicode Consortium to rejuvenate the use of Grantha script in the modern era and in the web.

Thanking you

Yours sincerley,

Maravanpulavu K. Sachithananthan,

For Kaanthalakam, Chennai, India.

அதே அமெரிக்க வாழ் பொறியாளர்கள் செல்வக்குமார், தில்லைக்குமார், பழனியப்பன், தமிழ் இணையப் கல்விக்கழக இயக்குநர் பொறிஞர் அர.நக்கீரன் ஆகியோர் சரியான விடை மடலும் விரிவான மறுப்புக்குறிப்பும் ஒருங்குகுறிச் சேர்த்தியத்திற்கு அளித்துள்ளனர். அவர்களின் தமிழ்க் காப்புச் செயல்களுக்கு நம் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

## தமிழ் நெடுங்கணக்கு

ஒவ்வொரு மொழிக்கும் ஒரு நெடுங்கணக்கு உள்ளது. அந் நெடுங்கணக்கைக் குலைத்தால் அம்மொழியின் கட்டமைப்புக் குலைந்துபோகும். ஒரு மொழியில் பிறசொற்கள் கலந்தால் அவற்றைக் களைந்துவிடலாம். ஆனால் நெடுங்கணக்கில் பிறவெழுத்துகள் கலந்து விடலாகாது. ஆங்கிலத்திற்கு 26 எழுத்துகள்தாம். அதில் 'ழ'கர ஒலிக்கு வரிவடிவம் இல்லையே என்று கவலைப்பட்டு அவர்கள் இணைத்துக் கொள்வார்களா? மொழிக்கென்ற மரபை குலைக்க முன்வருகிறீர்களே அது ஞாயமா? அதுவும் நாளைய தமிழ் வாழும் கணினியில் தமிழைக்குலைக்க முன்வரும் இரண்டகர்களே, தமிழின் தலைமுறை மரபைக் குலைக்க முனைந்தால் உங்கள் தலைமுறைதான் குலைந்துபோகும்.

## தமிழ் ஒருங்குகுறிக்குத் தமிழக அரசே காப்பு!

இந்திய அரசும் இந்த இரண்டகர்களைப் பயன்படுத்திக்கொண்டு, பிறமொழிகளின் சிறப்புகளை அழிக்க முயற்சி செய்கிறது. மொழிவழியாக மாநிலங்கள் தனித்திருக் கிறபோது, தமிழக அரசைக் கேட்காமல் மொழி உரிமைகளில் தலையிடுவது கூட்டாட்சி முறைக்குக் கேடானதாகும். உலகில் மூத்த மொழியான தமிழின் மரபையும் இலக்கணக் கட்டமைப்பையும் சீர்குலைக்கும் முயற்சியைச் செய்யவே கூடாது. மொழித் தொடர்பானவற்றில் தமிழக அரசைக் கலந்து கொள்ளாமல் இந்திய அரசு எதையும் செய்யக்கூடாது என்கிற வகையில் காப்பமைத்துக்கொள்ள வேண்டும். அதுதான் தமிழக அரசின் தன்னாட்சிக் கொள்கைக்கு முகாமையானதாகும். மேலும் தமிழக அரசு தனக்கென்று ஒரு மொழிக் கொள்கையை வரையறுத்துக் கொள்ளவேண்டும். தமிழக அரசின் அறிவுரையின்றி ஒருங்குகுறியில் எந்த மாற்றத்தையும் செய்யக்கூடாது என்பதைக் கண்டிப்புடன் தெரிவித்துவிட வேண்டும்.

**– மாகுன்றன்**


### வாழ்க்கை துணைவர் தேவை !

| | | |
|---|---|---|
| பெயர் | : | **செ.யாழினி** |
| பிறந்த நாள், அகவை | : | **18–10–1988, 25.** உயரம் : **5' 6"** (மாநிறம்) |
| கல்வித் தகுதி | : | கணினி மென்பொருள் பொறியாளர் (B.E., Computer Science) |
| பணி செய் நிறுவனம் | : | இந்துசுத்தான் கம்ப்யூட்டர் லிமிடெட் (HCL) |
| ஊதியம் | : | உரு. 30,000/– |
| எதிர்ப்பார்ப்பு | : | படித்த – சாதி மத மறுப்புடைய – தமிழின உணர்வாளர் |
| தொடர்பு எண் | : | **9884187979** |

தொடர் –26

# வேத வெறி இந்தியா

– தமிழரசு –

## ஆரிய யக்ஞங்களும் தமிழர் வேள்விகளும் தொடர்ச்சி - 3

இந்நிலையில், பழந்தமிழகத்தின் வாழ்வுமுறைகளும், அப் பழந்தமிழர் வாழ்வில் நடந்தவையாகக் குறிக்கப்பட்டிருக்கும் வேள்விகள் குறித்தும் சிலவற்றைப் பார்ப்போம்.

யாகம், வேள்வி, பலி இவை குறித்த பொருள்விளக்கத்தையும், அவை பழந்தமிழகத்தில் நடைபெற்ற வகைமுறைகளையும் முதலில் அறியலாம்.

'யாகம்' என்ற சொல் 'யக்ஞம்' என்ற சமற்கிருதச் சொல்லின் திரிபுச் சொல். யக்ஞம் என்பது தீ (அக்னி) வளர்த்து அதில் ஆடு, மாடு, குதிரைகளைப் பலியிட்டுப் பின் அவற்றை உண்பதான ஆரிய நாடோடிகளின் கொலைப்பலி வழக்கமுறையைக் கொண்டது. அத் தீ வளர்ப்பில் நெய்யும் தவசங்களும் இடப்பட்டன. பிற்காலங்களில் நெய், தவசங்களோடு சந்தனம் – பட்டுத் துணிகள், விலையுயர்ந்த பொருள்கள்களும் இடப்பட்டன.

வேள்வி என்பது தமிழ்ச்சொல். விரும்பு என்று பொருள் தரும் 'வேள்' எனும் முதனிலையிலிருந்து பிறந்தது.

தமிழிய மொழிகளான மலையாளத்திலும், தெலுங்கிலும் 'வேள்வி' என்றும், கன்னடத்தில் 'பேளுவெ' என்றும் இச்சொல் ஆளப்பெறுகிறது.

விரும்பிச் செய்யும் பல வினைகளையும் குறிப்பதாக அச்சொல் அமைந்திருப்பதைப் பாவாணர் எடுத்துக்காட்டுவார்.

திருமணம், விருந்தினர்க்குப் படைப்பு, தெய்வத்திற்குப் படைப்பு, பேய்களுக்குப் படைப்பு, கொடை அளித்தல் போன்ற வினைகளுக்கு அச்சொல் கையாளப் பட்டிருக்கின்றது.

*"நா முன்பு தொண்டு கொண்ட வேள்வியில்"*

*(பெரியபுராணம், தடுத்தாட்கொண்டது- 127)*

– என்பதில் திருமணம் எனப் பொருள்படுவதாகவும்,

*"இனைத்துணைத்(து) என்பதொன்று இல்லை விருந்தின்*
*துணைத்துணை வேள்விப் பயன்"* *(திருக்குறள் : 87)*

*"பரிந்தோம்பிப் பற்றற்றேம் என்பர் விருந்தோம்பி*
*வேள்வி தலைப்படா தார்"* *(திருக்குறள் : 88)*

– என்பவற்றில் விருந்தினர்க்குப் படையலாகப் பொருள்படுவதாகவும்,

*"வேள்வியிணழகியல் விரும்புவோரும்"* *(பரிபாடல் : 19-43)*

– என்பதில் தெய்வத்திற்குப் படையல் எனப்பொருள்படுவதாகவும்,

*"பண்ணிதைஇய பயங்கெழு வேள்வியின்"* *(அகநானூறு : 13-11)*

என்பதில் பேய்கட்குப் படையலாகப் பொருள்படுவதாகவும் கையாளப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

இவை குறித்தெல்லாம் பாவாணர் குறிப்பிடும்போது :

*"ஆரியர் தம் ஆரியக்கொள்கைகளைத் தமிழ்நாட்டில் பரப்புவதற்கும் 'யாகம்' எனும் கொலைப்பலியைத் தமிழரிடை எதிர்ப்பின்றிச் செய்தற்கும், தம் கொலை(வேள்வி)ப்பலிக்குக் கடவுள் (வேள்வி) யாகம் என்றும், வேதக்கல்விக்குப் பிரம (வேள்வி) யாகம் என்றும் பெயரிட்டு, அவற்றோடு பேய்ப்படையலாகிய பூத வேள்வியையும், விருந்தோம்பலாகிய மாந்த வேள்வியையும் இறந்த முன்னோர்க்குப் படைத்தலாகிய தென்புலத்தார் வேள்வியையும் செய்து ஐவகை வேள்வி என்று தொகுத்துக் கூறி, வேள்வியென்று வருமிடமெல்லாம் ஆரிய வேள்வியை (யாகத்தை) நினைக்குமாறு செய்துவிட்டனர்"*

– என்று விளக்குவார்.

இவற்றிலிருந்து பார்க்கும்போது யாகம் என்பது வேறு, வேள்வி என்பது வேறு என்பதைத் தெளிவாக அறியலாம்.

யாகம் என்பது யக்ஞம் எனும் தீ வளர்த்திடும் கொலைப்பலியாகவே வேதம் முழுமையும் கூறப்பட்டுள்ளது. தீக்குண்டங்கள் அமைத்து அதில் நெய்யூற்றுவது முதற்கொண்டு மாந்தப் பலிவரை பல யக்ஞங்கள் வேதங்களில் இடம் பெற்றிருப்பதைப் பார்த்தோம்.

அவற்றை வேள்வி எனக்கூறுவது பொருந்தாது. தமிழர்தம் வேள்வியை விருப்பம் என்றும், விருப்ப வேண்டுகை என்றும், விருப்பப்படையல் என்றும், விருப்பப்பூசை என்றுமான அளவுகளில் கருத இயலுமேயன்றி கொலைப்பலியிடல் எனக் கருத இயலாது.

திருமணம், விருந்தினர்க்குப் படைப்பு, தெய்வத்திற்குப் படைப்பு, பேய்களுக்குப் படைப்பு, கொடை என்பதாகவே தமிழர் வேள்வி எனும் சொல் கையாளப் பட்டிருப்பதை அறிந்தோம்.

இவ்வகை வேள்விகளாக நடத்தப்பெற்ற வேண்டுகைகள் எல்லாமும்கூட அரசர்களால், நிலக்கிழார்களாலேயே பெருமளவில் செய்யப்பட்டிருக்கின்றன.

ஆயினும், அவற்றுள்ளும் பல, ஆரிய நாடோடிகள் தமிழகம் வந்தேறியபின் நடந்த வழக்கங்களாகவே இருத்தல்வேண்டும். இருப்பினும் அவற்றில் கொலைப்பலிகள் நடந்திடவில்லை என்பதோடு நெய், தவசங்களிட்டுத் தீயிடல்கள் என்ற அளவிலே பெருமளவில் நடந்திருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கது.

அவ்வகையில், பழந்தமிழ் இலக்கியங்களில் ஆரியச்சார்பு வேள்விகள் நடந்ததற்கானப் பதிவுகள் இங்கொன்றும் அங்கொன்றுமாகவே உள்ளன.

திருமுருகாற்றுப்படையில், பெரும்பாணாற்றுப்படையில், பதிற்றுப்பத்தில், கலித்தொகையில், மதுரைக்காஞ்சியில், அகநானூற்றில், புறநானூற்றில் ஆங்காங்கே என அவ்வகை வேள்வித் தொடர்பான குறிப்புகள் உள்ளன. இவையன்றிச் சிலப்பதிகாரம், மணிமேகலையிலும் வேள்வி பற்றிய குறிப்புகள் உண்டு.

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியை நெட்டிமையார் பாடிய புறநானூற்றுப் பாடலில் :

*“நற்பனுவ னால் வேதத்*
*தருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை*
*நெய்ம்மலி ஆவுதி பொங்கப் பன்மாண்*
*வீயாச் சிறப்பின்* ***வேள்வி*** *முற்றி*
***யூப*** *வியன்களம் பலகொல்*
*யாபல கொல்லோ பெரும வாருற்று”* *(பாடல் எண் : 15)*

– என்பதில், சீற்றமுடையோன் ஆகிய பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் தூசிப்படையைக் கொள்ளவேண்டி வந்து பொருது வசையுற்ற வேந்தரோ பலர்; நால் வேதத்துக் கூறியவாறு வேள்விபல செய்து முடித்து அவ்வேள்விச் சாலைகளில் நட்ட வேள்வித் தூண்களும் (யூபங்களும்) பல; வசையுற்றவர் தொகையோ, யூபங்களின் தொகையோ இவற்றுள் மிக்க தொகை யாது? (ஔவை துரைசாமியார் உரை) என்று பொருள்படும்படி மேற்படி பாடல் எழுதப்பெற்றுள்ளது.

அதேபோல்,

*“நீர்நாண நெய்வழங்கியும்*
*எண்ணாணப் பல வேட்டும்”*

– என்று சோணாட்டுப் பூஞ்சாற்றூர்ப் பார்ப்பான் கௌணியன் விண்ணந்தாயன் எனும் பெருநிலக்கிழானை ஆவூர் மூலங்கிழார் பாடிய புறநானூற்று(எண் : 166)ப் பாடலின் வேள்வி பற்றிய குறிப்பில் :

*"கௌணியன் விண்ணந்தாயன் நடத்திய பெருவிருந்தோடு கூடிய வேள்வியில் அவனின் மனைவியர் தமக்குரிய ஏவல் கேட்டு நிற்க, நெய்யை நீரைப்போல் வழங்கி வேள்வி செய்தது" குறித்து வாழ்த்திப் பாடியிருப்பார்.*

மேலும், புறநானூற்று **224** ஆம் பாடலோ,

*"தூஇயல் கொள்கைத் துகளறு மகளிரொடு*
*பருதி உருவின் பல்படைப் புரிசை*
*எருவை நுகர்ச்சி* ***யூப*** *நெடுந்தூண்*
***வேத*** *வேள்வித் தொழில் முடித்ததூஉம்*
*அறிந்தோன் மன்ற அறிவுடையாளன்...."*

என்று சோழன் கரிகாற்பெருவளத்தானை, கருங்குழலாதனார் பாடியது.

தூய்மைக் கொள்கையோடு திகழும் மகளிரொடு கரிகால் பெருவளத்தான், வட்டவடிவில் அமைந்த வேள்விச் சாலையில் பருந்து வடிவிலான வேள்விக் குண்டத்தின் அருகில் நாட்டப்பட்ட யூபம் எனும் நெடுந்தூண்களுக்கு அருகில் அமர்ந்திருந்தான் என்பதாகத் தொடர்கிறது பாடல்...

– ஆக இப் பாடல்களிடையே இருக்கும் வேள்வி பற்றிய பதிவுகள் தரும் செய்திகள் ஆய்வுக்குரியன.

அவ் வேள்விகளில் கொலைப்பலிகள் நடந்தனவாகக் குறிப்புகள் இல்லை. அதேபோது, நெய் ஊற்றப்பட்டுள்ளது. தவசங்கள் (தானியங்கள்) இடப்பட்டதாகவும் பதிவு இல்லை. ஆயினும், தவசங்கள் பெருமளவில் தீக்கிரையாக்கப்பட்ட வேள்விகளும் ஏராளமாய்ப் பிற்காலச் சோழர் காலங்களில் நடந்திருக்கின்றன.

நில விளைச்சல் வழியான உருவாக்க (உற்பத்தி) மீத்தங்களையெல்லாம் வேள்வி எனும் பெயரில் தீயிட்டு அழிக்கவும் அதனால் வணிகமும் தொழிலும் வளர வழியின்றி குமுகத் தேக்கநிலை ஏற்பட்டதும் தமிழக வரலாற்றில் பெரும் அவல நிலைச் செய்திகள் என்பதையறிய வேண்டும்.

மேற்குறிப்பிட்ட வகையில் பழங்கால அரசர்கள் சிலர், ஆரிய யாக முறைகளைப் பின்பற்றியும், அதற்குரிய ஆரியச் சொல்லாடல்களையே பயன்படுத்தியும் வேள்வி செய்திட வேண்டுமாகக் கழகக்கால ஆரிய அடிமைப் புலவர்களே தூண்டியதுண்டு.

மேற்குறிக்கப்பட்டுள்ள புறநானூற்றுப் பாடல்களில் நெட்டிமையார் பாட்டிலும், ஆவூர் மூலங்கிழார் பாட்டிலும, 'தூண்' எனும் தமிழ்ச்சொல்லை விடுத்து, '**யூப**' எனும் வடசொல் பயன்படுத்தப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

வேள்வி மனைக்கு அருகில் அமைக்கப்படும் தூணுக்கு, வடமொழியில் இருக்கு வேதத்தில் குறிக்கப்படும் 'யூபம்' எனும் சொல்லையே தங்கள் பாடல்களில்

கையாண்டதோடு, அவ்வேள்விச் சிறப்பைப் புகழ்ந்தும் அதை நடத்திய அரசர்களை வாழ்த்தியும் எழுதிய அடிமைப் போக்கே சில புலவர்களிடம் இருந்திருக்கின்றது.

பாவாணர் அத்தகைய புலவர்களின் அடிமைப்போக்கைக் கடுமையாகச் சாடுவார் :

*“பல்வேள்விச் சாலை முதுகுடுமிப் பெருவழுதி ஆரியப் பல்சிறு தெய்வக் கொலை வேள்வி நெறியைத் தழுவினான். அவனைப் பின்பற்றுமாறு, மாங்குடி மருதனாரும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனை வேண்டினார். கரிகால்வளவன், பெருநற்கிள்ளி முதலிய சோழ வேந்தரும், பல் யானைச் செல் கெழுகுட்டுவன் சேரன் செங்குட்டுவன் முதலிய சேர வேந்தரும், முது குடுமி போன்றே கழிமடம்பட்டனர். பேதை வேந்தரையே மாற்றி இருப்பத்தொரு வேள்வியும் முடித்த பூஞ்சாற்றுர்ப் பிராமணனை, ஆவூர் மூலங்கிழார் மானமிழந்து மதிகெட்டுப் பாடியுள்ளார். சோழனும் பாண்டியனும் தன்னை இகழ்ந்தாரென்று செங்குட்டுவன் வெகுண்டபோது, மாடல வேதியன் (மறையோன்) அவனைப் புகழ்ந்து சினந்தணிவித்து வேள்வி இயற்றச்சொன்னது நச்சுத்தன்மையான வலக்காரமாகும்”*

– என்றெல்லாம் பாவாணர் கடுமையாகச் சாடுவார்.

தமிழர்கள் வேள்வி முறை ஆரிய யாக முறையினின்று பெருமளவில் வேறுபட்டு நாகரிகத் தன்மையில் வளர்ச்சியுற்றிருந்தது.

ஆரிய யாக முறைகள், நாகரிகமடையாத பழம் நாடோடிக் குலக்குழு வாழ்க்கைக்குரிய மக்களிதனாக இருந்தனவென்றால், தமிழரின் வேள்வி முறைகள் நாகரிகமடைந்து வளர்ச்சியுற்ற குமுகத்தில் மருதநிலப் பண்பாடென்னும் நிலவுடைமைப் பண்பாட்டில் நடந்த வேள்வி என்னும் வேண்டுகை முறைகளாகவே இருந்திருக்கின்றன.

மற்றபடி தமிழகத்திலும் தீயில் விலங்குகளைப் பலி இடுவதும், அவற்றைக் கூறுபிரித்துத் தின்பதுமான நடைமுறை இருந்திருக்க வேண்டுமானால், அது வரலாற்றுக் காலத்திற்கு மிக முந்தைய நாடோடிக் காலத்தில்தான் நடந்திருக்கவேண்டும். தமிழர்களின் தொல்காப்பியக் காலங்களுக்கு வெகு நூற்றாண்டுகளுக்கு முந்தியே, அதாவது கி.மு.5 முதல் 10ஆம் நூற்றாண்டுகளுக்கு முந்திய நூற்றாண்டுகளிலேயே அத்தகைய நாகரிகமற்ற நடைமுறைகள் இருந்திருக்கலாம்.

ஆரியர்கள் தமிழகம் வந்தபின், தமிழ் அரசர்களைத் தூண்டி அவர்கள் நடத்திய வேள்வித் தீயில் விலங்குகளைக் கொலைப்பலி செய்ததாக அறிவதற்கில்லை. அவியும் (நெய்யும்) தவசங்களுமே பெருமளவில் தீயிலிட்டு அழிக்கப்பட்டதாக அறிய முடிகிறது.

பழந்தமிழகத்திற்கு வந்தேறிய ஆரியம் தமிழர்களின் வளர்ச்சியுற்ற நாகரிக வேள்வி முறைகளையும், அதாவது தீ வளர்த்து, நெய் ஊற்றி, படையல் செய்து, விருந்துகொடுத்து செய்த வேண்டுகைகளையும் தன் வயப்படுத்திக்கொண்டது. அவ்வாறு தன்வயப்படுத்திக்கொண்ட வேள்வி முறைகளிலும் விளைச்சல் பொருள்களை அழிக்கும் நடைமுறையையே மேற்கொண்டது. வேள்விவழி உருவாக்கங்களை(உற்பத்திகளை)த் தீயிட்டு அழித்ததால், மீத்தங்களுக்கு வழியின்றி வணிகப்பெருக்கமும், தொடர்ந்து தொழில் பெருக்கமும் ஏற்பட இயலாமல் குமுகம் வளர்ச்சியுறாமல் தேக்க நிலையடைந்தது.

பழந்தமிழ் அரசர்கள் காலத்தில் மெல்ல தொடங்கி, அரசர்களும், நிலக்கிழார்களும் ஆரியப் பார்ப்பனர்களைப் புரக்கலாயினர். அவர்களுக்கு ஏராளமாய் விளைநிலங்களைக் கொடுத்தனர். வேள்விகளுக்கான பொருள்களைக் கொடுக்கவும், வேள்விகளின் பெயரால் அழிக்கவும் செய்தனர். பிற்காலச் சோழர்கள் காலத்தில் மிக அதிகமாகவும், பின்னர் தமிழகத்திற்கு வந்தேறி ஆட்சி செய்த மராட்டிய, தெலுங்கு, கன்னட நாயக்கர்களிடம் மேலும் அதிகமாகவும் அத்தகைய போக்கு இருந்ததைக் காணலாம்.

*“ஆயிரம் ஆயிரம் ஆரியர்(கு) ஈயிலென்*
*சிகரம் ஆயிரம் செய்து முடிக்கிலென்*
*பகரும் ஞானி பயலூண் பலத்துக்கு*
*நிகரிலை யென்பது நிச்சயந் தானே”* *(திருமந்.1824)*

– என்றும்,

*“ஆறிடும் வேள்வி அடிகொளும் நூலவர்*
*கூறிடும் விப்பிரர் கோடிபேர் உண்பதில்*
*நீறிடுந் தொண்டர் நினைவின் பயனிலை*
*பேறெனில் ஓர்பிடி பேறது வாகுமே”* *(திருமந்.1825)*

– என்றும் திருமந்திரப் பாடல்களின் கூற்றுகள் அவ்வகை நிகழ்வுகளின் சான்றுகளாகக் கணிக்கத்தக்கன.

தஞ்சாவூரை ஆண்ட பிற்கால விசயராகவ நாயக்கன் (கி.பி.1633 – 1673) தம் ஆட்சியின் நலன் கருதி நாள்தோறும் தாம் உணவு உண்ணும்முன் பன்னிரண்டாயிரம் ஆரியப் பிராமணர்களுக்கு உணவு படைத்து வந்தானாம். அவன் ஆட்சியில் ஓர் ஆண்டு, தொடர்ந்து பல நாள்விடாமல் பெருமழை பொழிந்து எங்கும் வெள்ளமாகிவிட்டதனால் அந்தப் பிராமணர்களுக்கு உணவு சமைக்க விறகு கிடைக்காமல் போனதாம். அதனால் அரண்மனையின் ஒரு பகுதியை இடித்து, அதிலுள்ள உத்திரம், துலாக்கட்டை, கைமரம், சட்டம், கம்பம், நிலை, கதவு, பலகணி முதலிய எல்லா மரவுறுப்புகளையும் வெட்டி எரிக்கச் சொன்னானாம், விலையுயர்ந்த பட்டாடைகளையெல்லாம் எண்ணெயில் தோய்த்தெடுத்து எரித்துச்

சமைத்துப்போடக் கூறினானாம். (பாவாணரின் – தமிழர் மதம் : பக்.115)

இப்படியான கொடுமைகளெல்லாம்கூட ஆரியப் பிராமணர்களைப் புரக்கும் நிகழ்வுகளாக நடந்திருக்கின்றன. அத்தகைய போக்கு பல நிலைகளில் இன்றும் தொடர்வதை அறியலாம்.

இவை ஒருபுறம் இருக்க, பலியிடுதல் தொடர்பான வழக்கங்களையும், பதிவுகளையும் அறிதல் வேண்டும்.

இக்காலத்தில் நகரங்களிலும், சிற்றூர்களிலும் சிறுதெய்வ வழிபாட்டில் பலியிடுதல் என்பது நடைபெற்று வருகிறது.

விழாக் காலங்களில் மட்டுமல்லாது வேண்டுகை நிறைவேற்றத்திற்காகவும் பெரும்பாலும் ஆடுகளைப் பலியிடுதல் ஆங்காங்கே வழக்காக நடந்து வருகிறது.

இடைக்காலங்களில் மிகமிக அரிதாக ஏதோ ஓரிரண்டு மாந்தப்பலிகள் நடந்திருக்கலாம். ஆனால் பழங்காலங்களில் அவ்வாறு நடந்ததற்கான பதிவுகள் இல்லை. மாடுகளைப் பலியிடுதல்கூட குறைவாகவே அதுவும் மருதநிலப்பகுதியல்லாத, முல்லை, குறிஞ்சி நிலப்பகுதிகளிலேயே நடந்திருக்க வேண்டும்.

ஆயினும் பழந்தமிழ் இலக்கியங்களில் பலியிடுதல் என்பது ஆடு, மாடுகளைப் பலியிடுவதான பொருளில் அமைந்திருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

*"தூவெள் ளரிசி, சில்பலிச் செய்து"*

– என்று நக்கீரரின் திருமுருகாற்றுப்படை(233–234)ப் பாடலிலும்,

*"தளிர்ஞர் மேனித் தொல் கவின் அழிய*
*பலிபெறு கடவுட் பேணி, கலி சிறந்து"*

– என்று மதுரை பெருமருதிள நாகனார் பாடிய நற்றிணைப் (251) பாடலிலும்,

*"அணங்கல் ஓம்புமதி வாழியநீ ! என*
*கணம்கெழு கடவுட்கு உயர்பலி தூஉய்*
*பரவினம் வருகம் கென்மோ - தோழி"*

– எனும் நக்கீரரின் நற்றிணைப் (358) பாடலிலும்,

*"மணிக்குரல் நொச்சித் தெரியல் சூடி*
*பலிக்கள் ஆர்கைப் பார்முது குயவன்*
*இடுபலி நுவலும் அகன்தலை மன்றத்து*
*விழவுத் தலை கொண்ட மறவிறல் மூதூர்"*

– எனும் கயமனாரின் நற்றிணைப் (293) பாடலிலும்,

*"வாடாப் பூவின் இமையா நாட்டத்து*

*நாற்ற உணவின் உருகெழு பெரியோர்க்கு*

*மாற்று அருமரபின் உயர்பலி கொமார்"*

– எனும் மதுரைக்காஞ்சி (457) பாடலிலும்,

*"காவல் மன்னர் கடைமுகத்து உகுக்கும்*

*போகு பலிவெண் சோறு போலத்*

*தூவவும் வல்லன் அவன் தூவங்காலே"*

– எனும் உறையூர் முதுகூத்தனார் பாடிய புறநானூற்றுப் (331) பாடலிலும்,

பலி என்பது பூசைக்கெனப் பூக்களிடுவதாகவும், தவசங்களிடுவதாகவும், சோறு தூவுவதாகவுமே இடம் பெற்றிருக்கின்றன.

காக்கைக்குப் பலியிடுதல் (நற்றிணை.343), காக்கை பலிச்சோற்றை உண்ணுதல் (நற்றிணை.281), தெய்வத்திற்குப் பூப்பலிச்செய்தல் (கலித்தொகை.93 – 24) போன்ற பல வழக்கங்களின் பதிவுகளில்கூட பலியிடல் என்பது விலங்குகளைப் பலியிடுவதாகக் கூறப்பெறவில்லை.

மணிமேகலையிலும்,

*"வெண்பலி சார்ந்த மெய்ம் முழு துறீஇ" (3-108) - என்றும்,*

*"நெல்லும் பொரியும் சில்பலி அரிசியும்" (6-95) - என்றும்,*

*"கடவும் பீடிகைப் பூப்பலி கடைகொளக்*

*கலம்பகம் பீடிகைப் பூப்ப பூப்பலி" (7-121)*

– போன்று பல இடங்களிலும் வெண்ணீறு பூசிக்கொள்வதைப் பலி என்றும், நெல்லும் பொரியும் அரிசி மாத்தூவுதலைச் சிறுபலி என்றும், மலர்களால் செய்யப்படும் பூசனைகளைப் பூப்பலி என்றும் குறிக்கப்படுவது கவனிக்கத்தக்கது.

இவ்வாறு பூசை செய்யப்படும் வேண்டுகை நிலைகளும், விருந்து நிலைகளுமே பெரும்பாலும் பலியென்னும் பொருளில் பழந்தமிழ் இலக்கியங்களில் கையாளப் பெற்றிருக்கிறது.

இக்காலும் கோயிலுக்குள் பூக்களிடும் மேடையைப் பலிமேடை (பலிபீடம்) என்று கூறும் வழக்கு தொடர்ந்து வருவது அறிதலுக்குரியது.

பெரும்பாலும் மருதநில வாழ்க்கை முறையில் வழிபாட்டிற்குப் பூச்சொரிதலும், நெல்மணி உள்ளிட்ட தவசங்களை, சோறு உள்ளிட்ட உணவுப் பொருள்களை பலியிடுதலுமே வழக்கமாக நடைபெற்றிருக்கவேண்டும். குறிஞ்சி, முல்லை நில வாழ்க்கை முறைகளில் அதுவும் தொல் பழங்காலங்களில் வேண்டுமானல் கால்நடைகளைப் பலியிடல் நடந்திருக்க இடமுண்டு.

அதன் தொடர்ச்சியாய் முல்லை நிலக் குலக்குழுக்களிடம் ஆடு, மாடுகளைப் பலியிட்டுச் சமைத்து உண்ணும் பழக்கம் தொடர்ந்திருக்க வேண்டும்.

அதன்வழியே, இக்காலும் தொல் குலக்குழுக்களின் தொடர்ச்சியாய் இருக்கும் குலங்களிடம் விழாக்காலங்களில் அத்தகைய வேண்டுகைக்கு ஏற்ப ஆடுவெட்டிச் சமைத்துக் கூடி உணவுஉண்ணும்முறை தொடர்ந்து வருவது அறியத்தக்கது.

நிலை இவ்வாறு இருக்க,

ஆரியப் பார்ப்பனியத்தின் யாக முறைகள் என்பவை வேறு, தமிழர்தம் வேள்வியும் பலி முறைகளும் வேறு என்பதைத் தெளிவாக உணரலாம்.

ஆரியப் பார்ப்பணர்களின் யாக முறைகளின் மந்திரங்களை அப்படியே தொடர்ந்து கொண்டு, இக்காலும் தீ வழி நெய்யும், தவசங்களும், பட்டாடைகளும் அரிய விளை பொருள்களும் அழிக்கப்படுவது ஆரிய ஆளுமை வெறிப்போக்கின் தொடர்ச்சியுடையதே என்பதை அறியவேண்டும்.

கோயில்களையும், அதன் வழிபாடு முறைகளையும் முழுமையாகக் கையகப்படுத்திக்கொண்டு மழை வேண்டியும், மக்கள் நலன் வேண்டியும், கோயில் விழாக்களுக்கென்றும் இக்காலத்தும் 'யாக' நிகழ்ச்சிகளாய் ஆரியம் ஆடும் வெறியாட்டங்கள் குறைந்தபாடில்லை. தமிழர்தம் வேள்வி அறிவுநிலை அறிந்து தமிழர்கள் அனைவரும் அந்த ஆரிய யாக முறைகளை மறுத்தாக வேண்டும். அவற்றை நம்பி அடிமைப்படும் கொடுமை, அறிவற்ற மூடநம்பிக்கையின் அடிமைப்போக்கின் தொடர்ச்சியே என்று அறிந்தாக வேண்டும்.

– தொடரும்...


## 'கனிச்சாறு' சலுகை விலை விற்பனை !

பாவலரேறு பெருஞ்சித்திரனார் பாடல்கள் 'கனிச்சாறு' 8 தொகுதிகள் (1,700 பக்கங்கள்) உரு.1,280.00 விலையுள்ள இத்தொகுப்புகள் பாவலரேறு பெருஞ்சித்திரனார் ஐயாவின் 80ஆம் ஆண்டை முன்னிட்டு 2013 சூன் திங்கள் இறுதிவரை உரு.1,000.00க்கு கிடைக்கும். அன்பர்கள் அஞ்சல் செலவு உரு.50.00– ஐச்சேர்த்து உரு.1,050.00ஐ 'ஆசிரியர், தென்மொழி, மேடவாக்கம் கூட்டுச் சாலை, சென்னை – 600 100' என்ற முகவரிக்கு பணவிடை வழியாகவோ, Editor, Thenmozhi, Chennai என்னும் பெயரில் வரைவோலை வழியாகவோ விடுத்து நூல் தொகுதிகளைப் பெற்றுக்கொள்ளலாம். தொகை விடுப்போர் தனி மடலில் அஞ்சல் குறியீட்டுடனான முழு முகவரி, தொலைபேசி எண் முதலியவற்றை விளக்கமாகத் தனிமடலில் எழுதி 'ஆசிரியர், தென்மொழி, மேடவாக்கம் கூட்டுச் சாலை, சென்னை – 600 100' என்ற முகவரிக்கு விடுக்கவும். அன்பர்கள் இவ்வரிய வாய்ப்பினைப் பயன்கொள்ள வேண்டுகிறோம்.

தென்மொழி வைப்பகக் கணக்கிலும் செலுத்தலாம். வைப்பகத்தின் பெயர், கணக்கு எண் இவற்றைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம். தொடர்புக்கு : 94444 40449, 94438 10662



# மொழி - இனம் - நாடு

## -இரணியன்-

"என்மொழி என்இனம் என்நாடு நலிகையில்
எதனையும் பெரிதென எண்ணமாட்டேன் ! – வேறு
எவரையும் புகழ்ந்(து) உரை சொல்லமாட்டேன்"

*என்று கொள்கை அறிவிப்பு வெளியிட்ட பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களின் 80ஆவது ஆண்டு விழா இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.*

*அவர் தமிழினம் உய்வுறத் தகுவழி சொன்னவர்; தமிழ் வரலாற்றில் தனித்தடம் பதித்தவர்; மொழி, இனம், நாடல்லால் வேறெண்ணா நெஞ்சினர்; பழந்தமிழ்ப் புலவர்கள் திரண்ட ஓர் வடிவினர். அவர்தம் 80ஆம் ஆண்டு விழாநாளில், தேசிய இனநலன் குறித்த சிந்தனைகளை இங்கே நாம் எண்ணிப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.*

*உலகம் முழுவதும் தேசிய இன விடுதலை என்பது, மொழி, இனம், நாடு என்னும் மூன்றின் விடுதலையாகவே கருதப்படுகிறது.*

*மொழிதான் ஓர் இனத்தைக் கட்டமைக்கிறது. ஒரு மொழிக்குரிய இனம் வாழ்வுபெற வேண்டுமானால், அதன் தேசியத் தாயகம் வாழ்வுபெற வேண்டும்.*

*மொழி பறிபோனால் மண் பறிபோகும்; இனம் சிதைந்து அழியும்.*

*வேல்சு தேசம்பற்றி நீங்கள் அறிவீர்கள். இங்கிலாந்து நாட்டால் மென்று செரித்துக்கொள்ளப்பட்டது வேல்சு.*

*1536ஆம் ஆண்டில், வேல்சு இங்கிலாந்துடன் இணைக்கப்பட்டது. வேல்சை அடக்கி ஆண்ட ஆங்கில முதலாளிகளுக்கு வேல்சு மொழி சிக்கலை உண்டாக்கியது. எனவே வேல்சு மொழியை வேல்சு நாட்டின் பள்ளிகளிலிருந்து அகற்றினர். விளையாட்டுக் களங்களில்கூட வேல்சு மொழியைக் குழந்தைகள் பேசக்கூடாது எனத் தடைசெய்தனர். பள்ளிகள் அனைத்தும் ஆங்கில வயமாயின.*

*கைப்பிடி அளவே உள்ள ஆங்கிலப் பள்ளிகளைக்கொண்டு, காவல் துறையைவிட, படை அமைப்பைவிட, மிகத் திறமையாகவும் செலவில்லாமலும், வேல்சு மக்களை ஆங்கிலம் மட்டுமே பேசுகின்ற மக்களாக மாற்றினர்! ஆங்கில நாகரிகத்திற்குள், ஆங்கிலப் பண்பாட்டிற்குள் அவர்களைக் கொண்டுவந்தனர். பிரித்தானிய பொருளியல் ஏற்றத்திற்கு அவர்களை உறுதுணையாய் மாற்றினர். !*

விளைவு, வேல்சு தன்னை இழந்தது ! தன் மொழியை, பண்பாட்டை இழந்தது ! வேல்சு நாட்டுச் சுரங்கங்களும், கனவகைத் தொழில்களும் பிரித்தானியப் பொருளியலில் முதன்மைப் பங்குபெறத் தொடங்கின !

இசுகாட்லாந்தில், அம்மண்ணுக்குரிய கெய்லிக் மக்களின் எழுச்சி 1746இல் ஒடுக்கப்பட்டது. இசுகாட்லாந்தின் 1872ஆம் ஆண்டுக் கல்விச் சட்டம், கெய்லிக் மக்கள் கெய்லிக் மொழி பேசுவதைத் தடைசெய்தது. கவனக்குறைவால் பள்ளிகளில் தாய்மொழி பேசிய குழந்தைகளுக்குக் கடுமையான அடி உதைகள் கிடைத்தன. தாய்மொழி பேசியோருக்கு விறகுக் கட்டைகளைச் சுமக்கும் தண்டனைகள் தரப்பட்டன.

எண்ணிப்பாருங்கள், எங்கு போனது கெய்லிக் மொழி ? என்ன ஆயினர் கெய்லிக் மக்கள் ?

பிரித்தானிய ஆங்கிலப் பெருவெள்ளத்தில், உருண்டு, தேய்ந்து சிதைந்துபோனது கெய்லிக், பிரித்தானியப் பேரரசில் மொழி இழந்து, முகம் இழந்து எடுபிடிகளாயினர் கெய்லிக் மக்கள்.

உலகம் முழுவதும் அதிகார முற்றாளுமைத் தலைமை நாயகர்கள், தாங்கள் அடிமைப்படுத்திய மக்களின் மொழிகளையே துகில் உரிகிறார்கள். ஏனெனில் மக்கள் மொழி என்பது அவர்களின் கொள்ளைக்கும் சுரண்டலுக்கும் இடையூறாய் இருக்கிறது.

ஆனால், அந்த அடிமைகளுக்கோ, அவர்களின் சொந்தமொழி ஒரு பெருமித வாழ்வை நினைவூட்டிக்கொண்டே இருக்கிறது. விடுதலை வாழ்வையும், தேசத்தின் தன்னுரிமையையும் நேசிக்கின்ற மக்கள், தம் இன விடுதலையையும் நில விடுதலையையும் மொழி விடுதலையோடு இணைத்தே நோக்குகிறார்கள்.

கருப்பின மக்களின் தன்மானத்திற்காகவும், தன்னுரிமைக்காகவும் எழுதுகோல் ஏந்திய ஆப்பிரிக்கப் பாவலர்களும் எழுத்தாளர்களும், இனி, ஆங்கிலத்திலோ, பிரெஞ்சிலோ, பிற அயல்மொழிகளிலோ எழுதப் போவதில்லை என முடிவுசெய்தார்கள். தங்கள் சொந்த இன மக்களுக்காக எழுதப்படும் எழுத்து, தங்கள் சொந்த மொழியில் மட்டுமே அமையவேண்டும் என முடிவெடுத்துள்ளார்கள்.

தம் குழந்தைகளுக்குத் தம் சொந்த மொழியில் கல்வி கற்பிக்கப்பட்டால்தான், பெருமிதம்மிக்க தன்னுரிமை வாழ்வு அவர்களுக்கு வாய்க்கும் எனப் பறைசாற்றுகிறார்கள்.

உலகப் புகழ்பெற்ற கீன்ய தேசத்து எழுத்தாளர் குகி வா தியாங்கோ,

“வரலாற்றில் மொழி என்பது, அதைப் பேசும் மக்களின் ஒன்று திரண்ட பட்டறிவு, ஒன்றுபட்ட தன்னுணர்வு ஆகியவற்றின் சேமிப்புக் கிடங்கு” - என்று கூறுகிறார்.

ஒடுக்குமுறைக்கு ஆளான தமிழ்மக்களுக்கு, அவர்தம் சொந்த மொழியை, கல்வியிலும், ஆட்சித்துறையிலும், பொதுஇடங்களிலும், வழக்குமன்றங்களிலும், வணிகத்திலும், வழிபாட்டிலும் மறுப்பதன்மூலம், தமிழரின் ஒன்றுதிரண்ட பட்டறிவை, ஒன்றுபட்ட தன்னுணர்வை, அறிந்துணர்வின் சேமிப்புக் கிடங்கை, உலகவயப் பகைவர்கள், "பாரதமயப் பசனையாளர்கள்" மறுக்கிறார்கள்; அப்புறப்படுத்த முயல்கிறார்கள்.

ஆண்டானின் மொழியை அடிமைக்குப் பழக்குவது எதன் பொருட்டு ?

வல்லரசுகளுக்கும் தில்லிக்கும் தமிழகம் கட்டுப்பாடற்ற வேட்டைக்காடு ; கண்களும் செவிகளும் சிந்தையும் அற்ற நல்லதோர் அடிமை. அடிமைத் தமிழினம் உண்மைகளைக் காணாமல், கேட்காமல், எண்ணாமல் வாழவேண்டுமானால் அது தன்மொழியைத் துறந்துவிடவேண்டும்.

தமிழினம் தமிழால் கற்று, உண்மைகளைக் கண்டும் கேட்டும் எண்ணியும், மொழி இன உணர்வுகளைக் கைக்கொண்டுவிடுமானால், அது தன் அடிமைத்தளைகள் அனைத்தையும் உடைத்து வீசும்.

இதைத் தவிர்ப்பதற்காகத்தான், வட்டிக்கடைக்காரர்களும், கள்ளப்பணத்தாள் பேர்வழிகளும், கடத்தல்காரர்களும், ஆங்கிலவழிப் பள்ளிகளை ஊருக்கு ஊர், வீதிக்கு வீதி தொடங்கியிருக்கிறார்கள்.

இந்த ஆங்கிலவழிப் பள்ளிகள், கொடுமையான பண்பாட்டுப் போர்க்கருவிகளாகும்.

குகி வா தியாங்கே கூறுகிறார் :

> "மக்களுக்குத் தங்கள் பெயர்களின்மீதும், தங்கள் பரம்பரையின்மீதும், தங்கள் மொழியின்மீதும், சூழ்நிலையின்மீதும், தங்கள் வலிமையின் மீதும், இறுதியில் தங்களின்மீதும் இருக்கின்ற நம்பிக்கையை, பற்றினை, ஈடுபாட்டைத் துடைத்து எறிவதுதான் ஆங்கிலப் பள்ளிகள் என்னும் இந்தப் பண்பாட்டுப் போர்க்கருவிகளின் நோக்கமாகும்".

நம்மைத் தாக்கித் தகர்த்துக்கொண்டிருக்கும் இந்தப் பண்பாட்டுப் போர்க்கருவியை எப்போது நாம் அடையாளம் காணப்போகிறோம் ?

ஐரோப்பிய முறையில், ஒரு புதுவகை மேட்டுக்குடியினரைத் திட்டமிட்டு உருவாக்குவதே ஆங்கிலப் பள்ளிகளின் நோக்கம்.

தான் யாரென்றோ, தன் நிலத்தின், இனத்தின், மொழியின் மரபுச் செழுமை இன்னதென்றோ தெரியாத குருட்டு ஊழியர்களை உருவாக்கித் தள்ளுவது ஆங்கிலப் பள்ளிகளின் செயல்திட்டம்.

இந்த நிலையில், தமிழர்கள் உணர்ந்துகொள்ள வேண்டியது என்ன ? ஆப்பிரிக்க எழுத்தாளர் கேவத் கூறுகிறார் :

"மொழி என்பது ஒரு தற்காப்புப்படை !
நம்மை நாம் இழக்காமல் இருப்பதற்கான அரண் !
அயலார் நம்மிடமிருந்து பிடுங்க முயலும் நம் அடித்தளம் !
மொழியே ஓரின மக்களின் முழுமைப் புகலிடம் !"

ஆப்பிரிக்க எழுத்தாளர்கள் நிறைவாக வெளியிட்டிருக்கும் அறிவிக்கை நம் ஆழ்ந்த சிந்தனைக்கு உரியது :

"அயலவரின் மொழி மக்களை அடிமைப்படுத்தி
வைக்கவே பயன்படும் !
நம் சொந்தத் தோற்றத்தை வடிவமைத்துக்கொள்ள
நம் சொந்த மொழியே பயன்தர வல்லது !"

பல்வேறு தேசிய இனங்களின் மொழிகளை ஆங்கிலம் அப்புறப்படுத்த முனைந்ததுபோல, பல்வேறு தேசிய இனங்களின் மொழிகளை அடியோடு வீழ்த்த இன்று இந்தியும் முந்திக்கொண்டு நிற்கிறது.

நம் தமிழ் அல்லாடிக் கொண்டிருக்கிறது !

தமிழர்களோ தள்ளாடிக் கொண்டிருக்கிறார்கள் !

இந்த நிலையில், தமிழ்மக்கள் துருக்கிதேசத்து வரலாற்றின் பக்கம் கொஞ்சம் கவனத்தைத் திருப்ப வேண்டுகிறேன்.

துருக்கியின் தந்தை 'கமால் அத்தா துர்க்' என்னும் 'முசுதபா கமால் பாட்சா', துருக்கியின் அடிமைத்தளைகள் அனைத்தையும் தகர்த்தெறிந்தான். துருக்கியின் தேசியப் பெருமிதத்தை உயர்த்துவதையே தன் முதல் வேலையாகக் கொண்டான்.

பள்ளிகளில் தொடக்கக் கல்வியைத் துருக்கிமொழியில் மட்டுமே கற்பிக்கப்பட ஏற்பாடு செய்தான். அயலார் நடத்தும் பள்ளிகளில் துருக்கி மொழியைக் கட்டாயப் பாடமாகக் கற்பிக்க வேண்டும் என்று சட்டம் செய்தான். எல்லாப் பள்ளிகளிலும் துருக்கி இன ஆசிரியர்களே பெரும்பான்மையாக இருக்கவேண்டும். வணிகக் குழுமங்களின் மடல் தொடர்புகள், கணக்கு வைப்புகள் யாவும் துருக்கி மொழியில்தான் மேற்கொள்ள வேண்டும் என்று கட்டாயமாக்கினான் கமால்.

துருக்கி மொழியில் கலந்திருந்த அரபிச் சொற்கள் அனைத்தையும் அகற்றச் செய்தான். பழங்காலத்தில் வழங்கிய தூய இலக்கியத் துருக்கியச் சொற்களையே பயன்பாட்டுக்குக் கொண்டுவந்தான். ஊர்ப் பெயர்களையும் ஆட்பெயர்களையும் துருக்கி மொழியிலேயே மாற்றியமைத்தான்.

தேசிய நாடாளுமன்றத்தின் முகப்பில் பொறிக்கப்பட்டிருந்த அரபி வாசகத்தை அகற்றிவிட்டு, "அரசு மக்களாலேயே நடைபெறுகிறது" என்று துருக்கி மொழியில் எழுதிவைத்தான். துருக்கியின் மொழிமானத்தையும், இனமானத்தையும், தேசமானத்தையும் உலக அரங்கில் நிமிர்ந்து நிற்கச் செய்தான் கமால்.

தமிழ்மண்ணில் தொடக்கக் கல்வியாவது தமிழில் கற்பிக்கப்பட வாய்ப்பு உண்டா? தேவையற்ற அயல் மொழிக்கலப்பு நீக்கப்படுவதற்கு இங்கே முயற்சி உண்டா? மக்கட்பெயர்களெல்லாம் புரியாத மொழிகளில் சூட்டப்படும் அவலம் மாறுவதற்கு ஏற்ற சூழல் இங்கே உண்டா?

ஆங்கிலப் பள்ளிகள், நடுவண்பாடத்திட்டப் பள்ளிகள், பன்னாட்டுப் பாடத்திட்டப் பள்ளிகள், சாராயக் கடைகளைப்போல் பெருகி, நடுத்தட்டு மக்களின் பொருளியலைக் கொள்ளையிட்டுக் கொண்டிருக்கின்றன.

தமிழ் மக்கள் தங்கள் "தேசம் எது?" என்கின்ற அடையாளத்தையே தொலைத்து விட்டிருக்கிறார்கள். நாம் அடிமைத் தொழில் புரிவதற்கே ஆளாக்கப்பட்டவர்கள் என்றே தமிழர்கள் எண்ணிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதற்கும்கூட இடையூறு வந்துவிட்டது. இந்திக்காரர்களும், வங்காளிகளும், குசராத்திகளும், அசாமியரும் இங்கே வந்து குவிந்து கொண்டிருக்கிறார்கள். கூலிகள், உடல் உழைப்புத் தொழிலாளர்கள், வணிகர்கள், அரசு அலுவலர்கள், மருத்துவர்கள் போன்றோராகப் பிறமாநிலத்தார் எண்ணிக்கை பெருகிக்கொண்டிருக்கிறது. தமிழ்மண், தமிழர் தாயகம் என்னும் தகுதியை இழந்துகொண்டிருக்கிறது.

சீன நாட்டில், இந்திய எல்லையில், இலடாக் பகுதியை ஒட்டி, 18 இலக்கம் சதுர அயிரமாத்திரி (கிலோமீட்டர்) பரப்பளவில், விரிந்து கிடப்பது "சிங்கியாங்" பெருநிலம், இது ஒரு கோடி "உய்க்கர்" முசுலீம்களின் தாயகம்.

இது வேளாண் வளம் நிறைந்தது; எண்ணெய், எரிவளி மிகுதியாகக் கிடைப்பது; சீனாவுக்கு மிகுந்த பணப்பயனை அளிப்பது.

ஆனால், உய்க்கர் முசுலீம்களுக்குச் சீன அரசுடன் இணக்கமான உறவு இருந்ததில்லை. தாம் இரண்டாந்தரக் குடிகளாக நடத்தப்படுவதாக அவர்கள் உணர்ந்தனர். எனவே, உலக அளவில், தமக்கான விடுதலை இயக்கத்தை அவர்கள் கட்டி எழுப்பினார்கள். "உலக உய்க்கர் பேராயம்" என்பது அவர்களின் விடுதலை இயக்கத்தின் பெயர்.

விடுதலைப்போர் அறவழியில் நடந்தது. அதிகாரத்தை ஏந்தியிருக்கும் பெரும்பான்மையினரான கன்சீனர்கள் கொடுமையான அடக்கு முறைகளை ஏவினர். அப்போது அறப்போர் படைக்கலம் ஏந்திய

*போராக மாற்றமெடுத்தது. பல்லாயிரக் கணக்கில் மக்கள் மாண்டார்கள். உய்க்கரின் விடுதலை வேட்கை மேலும் வலிமைபெற்றது.*

*இந்த நிலையில், உய்க்கர்களை ஒடுக்கவும், போராட்டத்தை நீர்த்துவிடச் செய்யவும் புதிய வழிமுறை ஒன்றைக் கண்டுபிடித்துச் சீன அரசு நடைமுறைப்படுத்தியது.*

*“சிங்கியாங்” தாயகத்தில், அலுவலராக, தொழில் முனைவோராக, உழைப்பாளிகளாக, கன்சீனர்களைக் கொண்டுவந்து சீன அரசு நிரப்பியது. சிங்கியாங் மாநிலமெங்கும் கன்சீனர்கள் நிலங்களை வாங்கிக் குடியேற சீன அரசு அனைத்து உதவிகளையும் செய்தது. இதனால், மண்ணின் மக்களாகிய உய்க்கர்கள் வேலைவாய்ப்பை இழந்தனர்; நிலங்களை விலைபேசி விற்றனர்; தாய் மண்ணிலிருந்து, தொலைதூரங்களுக்குத் துரத்தப்பட்டனர்.*

*சிங்கியாங்கில் 15 இலக்கம் பேராக இருந்த கன்சீனர்கள் 85 இலக்கம் பேராக உயர்ந்தனர். தீர்மானிக்கும் ஆற்றலாக எழுந்து நின்றனர்.*

*உய்க்கர்கள் மண்ணை இழந்தனர் ! வாழ்வை இழந்தனர் !*

*சொந்தத் தாயகம் என ஒன்றே இல்லாமல் செய்துவிட்டால், பிறகு ஏது போராட்டம் ? பிறகு எப்படி எழும் உரிமைக்குரல் ?*

*இந்தியாவின் வழிகாட்டுதலில் ஈழத்தமிழ் மண்ணில் இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.*

*ஈழப்போரை இராசபட்சே நடத்தினான் என எண்ணிக்கொண்டிருக்கிறோம்; இல்லை. அது, உலகத் தமிழினத்தின்மேல் இந்தியா தொடுத்த போர்.*

*தமிழ் இனத்தவர்கள் பேசுகின்ற தனித்தன்மை, தன்னம்பிக்கை, பெருமை, வீரவரலாறு, தனித்தன்மையான மொழிச்சிறப்பு, இவற்றால் அது கொண்டிருந்த குமுகப் பெருமித உணர்வு - அனைத்தின்மீதும் இந்தியா தொடுத்த போர் அது. “உன்னிடம் ஒரு சரக்கும் இல்லை, சும்மா கிடடா சுப்பா” என்று கூறி, நம் மண்டையில் அடித்துத் தரையில் நம்மைக் குந்தவைத்த நிகழ்வு அது. எண்ணும்போதெல்லாம் பதறுகிறது மனம் !*

*தமிழ்மக்களாகிய நம் மனத்திலும், அறிவிலும், நாவிலும் நம் தாய்மொழியே வாழ்வுபெற வேண்டும். மொழி மானம் எய்தாமல் மொழி உரிமை வாய்க்காது ! மொழி உரிமை வாய்க்காமல் நில மீட்பு நிகழாது !*

*தெற்கு சூடானின் கருப்பு இன மக்கள் 20 இலக்கம் பேர், போரால் மாண்டு, படுகொலைகள் செய்யப்பட்டு, காணாமல் போய், பாலியல் வன்கொடுமைகளுக்கு ஆளாகி, மிகக் கொடிய இன அழிப்புக்கு ஆளானார்கள்.*

இறுதியில், உலகம் சினந்தெழுந்ததால், "உலக ஒன்றிய நாடுகள் அவை" கருத்துக் கணிப்பு நடத்தியது. அதன் அடிப்படையில் இன்று தெற்கு சூடான் விடுதலை பெற்றுள்ளது. உலக நாடுகள் ஒன்றியத்தின் 193ஆவது உறுப்பு நாடாக அது மலர்ந்துள்ளது.

500 ஆண்டுகளாக அடங்கிக்கிடந்த இசுகாட்லாந்தில் அடுத்த ஆண்டு மக்கள் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டு, பிரித்தனிலிருந்து பிரிந்து செல்ல உள்ளது. பிரித்தனின் தலைமை அமைச்சர் இடேவிட் கேமரூன் இசுகாட்லாந்து மக்களை நோக்கி "பிரிந்து செல்ல வேண்டாம்; சேர்ந்தே இருப்போம்" என வேண்டுகோள் விடுத்துக்கொண்டே இருக்கிறார்.

நாகரிகமான முறையில் தேசிய இனங்கள் பிரிந்து செல்வதை உலகம் ஏற்கும் காலம் வந்து கொண்டிருக்கிறது. ஆனால், ஆசியா மட்டும் தேசிய இனங்களின் நலிவுக் கூடமாக நீடித்துக்கொண்டிருக்கிறது.

எவரும் பிரிந்தே தீரவேண்டும் என்பதில்லை. பிரிவதற்கான தேவை வந்தால், பிரிந்துகொள்ள வேண்டும். மக்கள் உரிமைகள் மதிக்கப்பட வேண்டும் என்பதுபோல் தேசிய இன உரிமைகளும் மதிக்கப்பட வேண்டும்.

மிகக்குறைந்த எண்ணிக்கையில் பேசப்படும் மொழிக்கும், அம் மொழிக்குரிய மக்களுக்கும் முழுமையான சமவாய்ப்பு வழங்கப் படவேண்டும். உலகில் உள்ள அனைத்து மொழிகளும் பண்பாடுகளும் காக்கப்படுவதையே நாம் விரும்புகிறோம்.

எந்த ஒரு தேசிய இனத்திற்குரிய செல்வங்கள், உடைமைகள், மொழி பண்பாடு கலை இலக்கியம் போன்றயாவும் எவராலும் சேதப்படுத்தப்படக் கூடாது.

தமிழ்மக்களாகிய நாம், நம் மண்ணையும் இனத்தையும் மொழியையும் காத்துக்கொள்வதற்கு, இவற்றின் மீதான உரிமையை நாமே கைக்கொள்வதற்கு மிக ஆழமாகத் திட்டமிட வேண்டும்.

அறிவியல் நெறிப்பட்ட, மக்கட் குமுக வரலாற்று நெறிமுறை களோடு கூடிய செயல்திட்டங்கள் நமக்குத் தேவை. இழந்தவற்றை மீட்பதற்கும், இருப்பவற்றைக் காப்பதற்கும் அவை உதவ வேண்டும்.

நம் முன்னோர்களை, அவர்களின் இயக்கங்களை, செயல்பாடு களைப் பழிதூற்றிக் கொண்டிருப்பதால் ஒரு பயனும் விளையப் போவதில்லை.

அவர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் நமக்கானவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும். அனைத்தையும் அனைவரையும் முரண்பாடுகளோடு விளங்கிக்கொள்ள வேண்டும். ஒவ்வோர்

*இயக்கத்தினிடத்தும் ஒவ்வொரு தலைவனிடத்தும் நமக்கான கூறுகள் தேவைகள் இருக்கும். அவற்றைப் பயன்கொள்ள வேண்டும்.*

*நமக்கு ஒவ்வாதன எங்கிருந்தாலும் புறந்தள்ள வேண்டும். சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு, நம் இலக்கை எய்துவதற்கான போர் விரகுகளை வகுக்கவேண்டும்.*

"என்ன பகை களைந்தோம் ?
எல்லோரும் உட்பகைத்தோம் !"

*- என்று பாவலரேறு வருந்திப் பாடிய நடைமுறை மாற்றம் பெற வேண்டும்.*

"ஏழுகோடித் தமிழர்கள் இருந்தால்
ஏழுகோடி நினைவுகள் இருக்கும் !
ஏழுகோடி நினைவுகள் எழுந்தால்
எண்பதுகோடிப் போக்குகள் தோன்றும் !
வாழும் வகைகள் ஆளுக் கொன்று !
தாழும் நிலைகள் நாளுக் கொன்று !
ஏற்றம் என்பது கட்சி எண்ணிக்கை !
மாற்றம் என்பது மனநிலைத் திரிபுகள் !"

*- என ஐயா வருந்திய நிலை இனி மாற்றப்படவேண்டும்.*

ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின்
நீள்வினையால் நீளும் குடி.

*- என்னும் வள்ளுவப்பேராசானின் வாய்மை உரையை மனத்திற் கொள்வோம்; வினைக்கு முன்வருவோம்.*

**(03.03.2013இல் சென்னை இலயோலாக் கல்லூரியில் நிகழ்ந்த கனிச்சாறு வெளியீட்டு விழா மற்றும் பாவலரேறு 80ஆம் ஆண்டுவிழாக் கருத்தரங்கில் ஆற்றிய உரை).**

**தென்மொழிக்குப் பணவிடை அனுப்பும் அன்பர்களுக்கு ஒரு செய்தி !**

தென்மொழிக்குப் பணவிடையை மின் – பணவிடையில் (e-Money Order) அனுப்புவதால் அனுப்பியவரின் சரியான முகவரிகள், எதற்காக அனுப்பப்பெறுகிறது என்ற விளக்கங்கள் கிடைக்கப் பெறுவதில்லை. எனவே பணவிடையைத் தொடர்ந்து மடல் ஒன்றை விடுத்து, யார், எந்த முகவரியிலிருந்து விடுக்கப்பெற்றது என்ற அனைத்து விளக்கங்களையும் அதில் குறித்து அனுப்புமாறு அன்புடன் வேண்டுகிறோம். தொகை விடுத்தவர்கள் தொலைபேசிவழி தொடர்புகொண்டு உறுதிசெய்து கொள்ளவும் வேண்டுகிறோம்.

பணவிடை அனுப்பவேண்டிய முகவரி:
**ஆசிரியர், தென்மொழி**, மேடவாக்கம் கூட்டுச் சாலை, மேடவாக்கம், சென்னை – 600 100.
தொலைபேசி : 94444 40449, 94438 10662

**- ஆசிரியர், 'தென்மொழி'**

தமிழர்களே சிந்தியுங்கள் !

# இந்தியாவில் அழிக்கப்பட்டுவரும் தமிழினம்!

- தேவாரம் மு.தனராசு -

தமிழர்களை, தமிழ்நாட்டை உலகின் வரைபடத்திலிருந்தே நீக்கும் வேலையை இந்திய அரசு தொடர்ந்து செய்துகொண்டே இருக்கின்றது. இனியும் நாம் விழிக்காவிட்டால், உலகில் தமிழ் இனம் என்ற ஒன்று இருந்தது என்றநிலை விரைவிலேயே உருவாகி விடும்.

நாம் இந்தியா என்ற அமைப்பில் இனியும் இருக்க வேண்டுமா ? என்று சிந்திக்கும் வேளை வந்துவிட்டது.

இந்திய அரசின் எரிவளி நிறுவனமான 'கெயில்' என்ற நிறுவனம், கேரள நாட்டுக் கொச்சியில் இருந்து, கருநாடக வெங்காலூருக்கு எரிவளி குழாய்களைத் தமிழ்நாட்டு வழியாகப் பதித்து அனுப்பும் வேலையைச் செய்து கொண்டுள்ளது.

கேரளாவை ஒட்டிய மாநிலம்தான் கருநாடகம். கேரளாவின் மேற்குக் கடற்கரையில் கொச்சி அமைந்துள்ளது. மேற்குக் கடற்கரையை ஒட்டிய நெடுஞ்சாலை வழியே குழாய்கள் பதித்து எரிவளியை வெங்காலூருக்கு அனுப்பமுடியும். செலவும் குறைவு. தமிழ்நாட்டு வழியே கொண்டுசெல்வதைவிடக் குறைவான தொலைவிலேயே இந்த எரிவளிக் குழாய்களை அமைக்கமுடியும்.

கேரளாவில் சுமார் 180 அயிரமாத்திரி முதல் 200 அயிரமாத்திரி தொலைவும், கருநாடகாவில் 100 முதல் 150 அயிரமாத்திரி தொலைவும், உள்ள முறையில் இந்த எரிவளிக் குழாய்களை அமைக்கமுடியும். இதில் பெரும் அளவு, தேசிய நெடுஞ்சாலைகளின் ஓரங்களிலேயே பதித்துக்கொண்டுபோக முடியும். விளைநிலங் களுக்குப் பெருங்கேடு உண்டாகாத வேலையாகவும் இருக்கும்.

ஆனால் இந்திய அரசின் எரிவளி நிறுவனம், கேரளாவில் 90 அயிரமாத்திரி கருநாடகத்தில் 30 அயிரமாத்திரி அளவுக்கும் குறைவாகவும், தமிழ்நாட்டு விளைநிலங்களினூடே 200 அயிர மாத்திரி தொலைவுக்கு அதிகமாகப் பதிக்கும் முறையில் திட்டமிட்டுச் செயலாற்றுகின்றது.

இதனால் தமிழ்நாட்டில், கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தருமபுரி, கிருட்டிணகிரி ஆகிய ஏழு மாவட்டங்களில் உள்ள 138 ஊர்களின் வழியாக 200 அயிர மாத்திரி தொலைவுக்கும் அதிகமான விளைநிலங்களின் வழியே குழாய் பதிக்கும் வேலையை நடத்திக் கொண்டுள்ளது.

எரிவளிக் குழாய் பதிப்பதற்காகக் கையகப்படுத்தப்படும் விளைநிலங்களுக்கு இழப்பீடு இல்லை என்ற முறையிலேயே, விலை வரையறுக்கப்பட்டுள்ளது.

என்ன விலை வரையறை செய்தாலும் நெய்வேலி நிலக்கரிச் சுரங்கத்திற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு உயர் வழக்கு மன்றத்தின் ஆணைக்குப் பிறகும் 25, 30 ஆண்டுகளாகப் பணம் கிடைக்காத நிலையைத் திட்டமிட்டு இந்திய அரசு உருவாக்கியுள்ளது நாம் அறிந்ததே.

ஐந்தடி ஆழத்தில் புதைக்கப்படும் இந்த எரிவளிக் குழாய்களை மூடிய பின்பும் குழாய் பதித்த இடத்தில் 30 அடி அகலத்திற்கு பயிர் செய்தல், செடி கொடிகள் நடுதல், மரம் நடுதல் மட்டுமல்லாமல், பாசனத்துக்குத் தண்ணீர் கொண்டு செல்ல, வாய்க்கால்கள் அமைத்தல் போன்ற வேலைகள் எதுவும் நடத்தக்கூடாதாம்.

அதுமட்டுமல்லாமல், இந்தப் பகுதியில் இதுபோன்ற வேலைகள் நடைபெற்றாலோ, குழாய்களுக்குக் கேடு உண்டா னாலோ, நிலத்தின் சொந்தக்காரருக்கு தண்டத்தொகை யும், சிறைப்படுத்து தலும் நடைபெறும் என்று ஒப்பந்தம் போட்டுள்ளனர்.

இதுபோன்ற கொடுமையான சட்டங்களை வல்லாளுமைக் கொடுங்கோல் அரசுகள்கூடப் போட்டதாக வரலாறு இல்லை.

இவ்வாறு எரிவளிக் குழாய் பதிக்கப்பட்டால், தமிழ் நாட்டின் ஏழு மாவட்டங்களிலுள்ள 138 ஊர்களில் ஒன்று இரண்டு குறுக்கம் முதல் 5 குறுக்கம் நிலம் வைத்துள்ள உழவர்கள், எவரும் தங்கள் நிலத்தில் பயிர்த்தொழில் செய்ய முடியாது. பயிர்த்தொழில் செய்யமுடியாதது மட்டுமல்ல, நிலத்தில் நுழையக்கூட முடியாத நிலையும் உருவாகும். தமிழ்நாட்டு உழவர்களையும், பயிர்த் தொழிலையும் அழிக்கும் வேலையை இதைவிட வன்மம் கொண்டு யாரும் செய்யமுடியாது.

'பாசிச'க் கொடுங்கோன்மை என்பது இத்தாலியில்தான் உருவானது. அந்தப் பாசிச முசோலினியின் வழிவந்த இத்தாலிய சோனியாவின், தமிழின அழிப்பு நடவடிக்கையின் தொடர்ச்சி யாகவே கெயில் நிறுவனத்தின் எரிவாயுக்குழாய் அமைக்கும் திட்டம் நடைபெற்றுக்கொண்டுள்ளது.

ஈழத்தமிழர்களை அழித்தபின்பு, தாய்த்தமிழ்நாட்டுத் தமிழர் களையும், தமிழ் நாட்டையும் அழிக்கும் வேலையை இத்தாலிய சோனியாவின் இந்திய அரசு செயற்படுத்திக் கொண்டுள்ளது.

இதற்குப் பிறகும் சிந்திக்க வேண்டாமா தமிழர்களே.

இத்தாலிய நாட்டுக் கடற்படையால், கேரள மீனவர்கள் சுட்டுக்கொல்லப் பட்டதற்காக இத்தாலிய நாட்டு அரசையே இந்தியாவுக்கு அழைக்கமுடிந்தது இந்திய அரசால். குற்றம் சாட்டப்பட்டவர்களை, கயமைத்தனமாகத் தன்னாட் டுக்கு வரவழைத்து மீண்டும் அனுப்பமுடியாது என்று இத்தாலிய அரசு கூறியவுடன் இந்திய அயல்துறை, இந்தியப் நாடாளு மன்றமே பதறுகிறது.

கூடங்குளம் அணுஉலைபற்றி இதுவரை வாயைத்திறக்காத இந்தியத் தலைமையமைச்சர், தமிழ்நாட்டு மீனவர் சிக்கல், காவிரி, பாலாறு, முல்லைப் பெரியாறு என்று தமிழ்நாட்டின் எந்தப் சிக்கலிலும் வாயையே திறக்காத மன்மோகன்சிங், உறக்கத்தில்கூட எழுந்து இத்தாலிய அரசைக் கண்டிக்கிறார்.

ஆனால் நாள்தோறும் இலங்கைக் கடற்படையால், தமிழ் நாட்டு மீனவர்கள் சுடப்படுவதும், சிறைப்படுத்தப் படுவதும், 600க்கும் மேற்பட்ட மீன்பிடித் தமிழர்கள் கொல்லப்பட்டபோதும் அமைதிகாத்து வேடிக்கைபார்க்கும், இந்தியக் கட்டமைப்பில் நாம் இன்னமும் இன்னலைப் பெற்றுக்கொண்டுள்ளோம்.

இலங்கை அரக்கன் இராசபட்சேயைப் போர்க்குற்றவாளியாக அறிவிக்க இந்திய அரசு பன்னாட்டு ஒன்றியத்தில் தீர்மானம் கொடுக்கவேண்டும் என்று கோரிக்கை வைக்கும் தமிழர்களே இராசபட்சே கூறுவதை நினைத்துப் பாருங்கள். “பன்னாட்டு ஒன்றியமோ உலக நாடுகளோ என்ன சொல்கின்றன என்பது பற்றி எங்களுக்கு கவலை இல்லை; இந்தியா என்ன நினைக்கிறது என்பதுதான் நாங்கள் எதிர்பார்ப்பது. இலங்கை ஈழத்தமிழர்களை அழித்த சிக்கலில் இந்தியா எங்களுக்கு ஆதரவாக இருக்கின்றது என்பது ஒன்றே எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியது” என்று கொக்கரிக்கின்றான்.

இதைவிட அண்டை நாடான இலங்கையின் உள்நாட்டுச் சிக்கலான ஈழத்தமிழர் அழிப்புச் சிக்கலில் தலையிடமுடியாது என்றுகூறி மேலும் இலங்கை, இந்தியாவின் நட்பு நாடு என்று கூறி, ராடார் கருவிகளையும் அவற்றை இயக்க ஆட்களையும், வானூர்திகளையும், கொத்துக் குண்டுகளையும் கொடுத்து ஈழத் தமிழர்களைக் கொலை செய்வதற்குத் துணைபோன இந்திய அமைச்சரான பிரணாப் முகர்சி இன்று இந்தியாவின் குடியரசுத் தலைவராகப் பதவி ஏற்றுள்ளார்.

இன்னமும் நாம் இந்தியாவின் இன்னலில் இருந்து கொண்டுள்ளோம்.

தமிழ்நாட்டின் தேனி மாவட்டம், தேவாரம் பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடியில், 100 அடி விட்டமுடைய, மூன்று அயிரமாத்திரி நீளச் சுரங்கம் தோண்ட இந்திய அரசால் திட்டமிடப் பட்டுள்ளது.

எதற்கு இந்தச் சுரங்கம்? “நியூட்ரினோ” என்ற அணுத்துகள் ஆய்வு நடத்தப்போகிறார்களாம் ! நியூட்ரினோ என்றால் என்னவாம் ? அது யாருக்கும் தெரியாதாம்.

பின்பு ஏன் தமிழ் நாட்டில் சுரங்கம் தோண்டுகிறார்களாம் ?

இந்தியாவிலுள்ள அணு உலைகளின் அணுக்கழிவுகளைப் புதைப்பதற்காகத் தோண்டுகிறார்கள் என்பது வெளிச்சமாகியுள்ளது.

உச்ச வழக்குமன்றத்தில் இந்திய அரசு, அணு உலைக்கழிவுகளை, கைவிடப்பட்ட கோலார் தங்கச் சுரங்கத்தில் புதைக்கப்போகிறோம் என்று வாக்குமூலம் கொடுத்தது.

கோலார்ப் பகுதி மக்கள், குறிப்பாகக் கருநாடக அரசு எதிர்ப்புத் தெரிவித்ததன் காரணமாக அணு உலைக் கழிவுகளைக் கோலார் தங்கச்

சுரங்கத்தில் புதைப்பதில்லை என்று அறிவித்துள்ளது இந்திய அரசு. இதைப்போலவே, "நியூட்ரினோ" அணு ஆய்வு செய்யும் சுரங்கத்தை கைவிடப்பட்ட கோலார் தங்கச் சுரங்கத்தில் அமைக்கப்போவதாக இந்திய அரசு அறிவித்தது. அதனைக் கோளார் மக்கள் எதிர்த்தன் காரணமாக, "நியூட்ரினோ" அணுத்துகள் ஆய்வகச் சுரங்கத்தைத் தேனி மாவட்டம், தேவாரம் பகுதியில் தோண்டுவதாக முடிவெடுத்தார்களாம். இந்தச் செய்திகள் மூலம், இந்தியாவின் அணு உலைக் கழிவுகளைப் புதைக்க நியூட்ரினோ ஆய்வகம் என்ற பெயரில் சுரங்கம் தோண்டப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

அது மட்டுமல்லாமல் இத்தாலியச் சோனியாவின் மாமியார் இந்திரா, இந்தியாவின் ஆட்சியில் இருந்தபோது, அணுஉலைகள் அமைக்கத் திட்டமிட்ட பேச்சின்போது, அணு உலைக் கழிவுகளை, தமிழ்நாட்டுக் குற்றால மலையின் கீழே சுரங்கம் தோண்டிப் புதைக்கலாம் என்று கருத்துத் தெரிவித்திருந்தாராம்.

இதன்படி பார்த்தாலும், குற்றால மலையின் தொடர்ச்சியான, தேனி மாவட்டம், தேவாரம் பகுதி மலையின்கீழ் "நியூட்ரினோ" ஆய்வகம் என்ற பெயரில் தோண்டத் திட்டமிட்டுள்ள சுரங்கம் இந்திய அணு உலைக் கழிவுகளைப் புதைக்கத்தான் என்பது வெளிச்சத்திற்கு வருகிறது.

தமிழ்நாட்டின் வடபகுதி கடற்கரையில் செயல்படும் கல்பாக்கம் அணு உலையின் கதிர்வீச்சால், கல்பாக்கத்தைச் சுற்றி 50 முதல் 100 அயிரமாத்திரி சுற்றளவுக்குக் காற்றும், நீரும், சுற்றுச்சூழலும் கேடடைந்துள்ளன.

இது போதாதென்று தமிழ்நாட்டின் தெற்கெல்லையான குமரியில், கூடங்குளத்தில் அணுஉலை அமைக்கப்பட்டுள்ளது.

இந்த அணு உலை, கேரளத்தில் அமைக்க திட்ட மிடப் பட்டது. மலையாளி களின் எதிர்ப்பால், தமிழ்நாட்டின் கூடங்குளத்தில், அமைக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு மக்களின் ஒன்றுபட்ட எதிர்ப்பையும் மீறி கூடங்குளத்தில் அணு உலை கட்டப்பட்டுள்ளது. பிற மாநிலங்களில், கேடான திட்டங்களை மக்கள் எதிர்க்கும்போது அந்த மாநில அரசும், அந்த மாநில சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும், உயர் அலுவலர்களும் சேர்ந்து எதிர்க்கின்றனர். இதனால், இந்தக் கேடான திட்டங்கள் எல்லாம் அங்கு அமைக்கப்படுவதில்லை.

ஆனால் தமிழ்நாட்டின் ஆட்சியில், தமிழரல்லாத தெலுங்கர் கருணாநிதியும், கன்னட செயலலிதாவும் மாறிமாறி ஆள்வதால், இவர்களின் துணையோடு, மக்களின் எதிர்ப்பையும் மீறி கேடான திட்டங்கள், தமிழர்களை, தமிழ்நாட்டை அழிக்க ஒரு வன்மம் கொண்டே இந்திய அரசால் செயல்படுத்தப்பட்டுக் கொண்டுள்ளன.

இன்னமும் நாம் இந்தியாவின் கட்டமைப்பில் இருக்க வேண்டுமா ?

– தொடரும்...



# தஞ்சை வரலாறு

தொல்லியல் அறிஞர்

**- நடன.காசிநாதன் -**

**தக்கணமலை**

தமிழகத்தின் நடுநாயகமாகத் திகழும் தஞ்சைத் தரணியில், நஞ்சை வயல்களை உருவாக்கித் ''தமிழகத்தின் நெற்களஞ்சியம்'' என்ற பெயரைப் பெற்றுத் தந்திருக்கும் வற்றாத காவிரி பாய்ந்தோடுகின்ற பகுதியில் தக்கண மலையாக உயர்ந்து நிற்கும் பெருவுடையார் கோயில் தக்கண மேரு(தெற்கு மலை) என அழைக்கப்பெறுகிறது. இத் தக்கணமேருவுக்கு முன்பாகத் தமிழ்நாட்டின் வடபகுதியில், இப்போதுள்ள காஞ்சிபுரம் மாவட்டத்தில் மலை போன்ற ஒரு கோயில் பல்லவர் காலத்திலேயே புகழோடு விளங்கியிருக்கிறது. அக்கோயிலுக்கு ''உத்திரமேரு'' என்ற பெயரும், அது அமைந்திருக்கும் ஊருக்கு ''உத்திரமேரூர்'' என்ற பெயரும் வழங்கி வருகின்றன. ''உத்தரமேரு'' உள்ள ஊருக்கு ''உத்திரமேரூர்'' என்று வழங்கியது போன்று ''தக்கணமேரு'' அமைந்திருந்த பகுதிக்குத் (அதாவது இப்போதுள்ள தஞ்சைக்குத், ''தக்ஷிணமேரூர்'' என்றும் ஒரு பெயர் சோழர் காலத்தில் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் அவ்வாறு வழங்கப் பெற்றதற்கான சான்று இதுவரை கிடைத்தில.

**தஞ்சை, காரணப்பெயர்**

இவ்வூர் பல்லவர் காலம் தொட்டு, அதாவது கி.பி.6–7ஆம் நூற்றாண்டி லிருந்து ''தஞ்சாவூர்'' என்றே அழைக்கப்பெற்றிருக்கிறது. ''தஞ்சாவூர்'' என்பது காரணப்பெயராக இருக்கலாம் தண் + செய் + ஊர் என்பது தஞ்சை ஊர் என்று ஆகி, பின்னர்த் தஞ்சாவூர் என்று வழங்கப்பெற்றிருக்கலாம். ஆதலால்தான் பண்டை இலக்கியங்களான தேவாரம், நாலாயிரத் தெய்வப்பனுவல் போன்ற இலக்கியங்களிலும், கல்வெட்டுகளிலும் ''தஞ்சை'' என்றே அழைக்கப்படுகிறது. தண் + செய் = தஞ்சை – குளிர்ந்த வயல்களையுடைய ஊர் என்று பொருள்.

**அப்பர் தேவாரத்தில் தஞ்சை**

சைவ சமயக் குரவருள் ஒருவராகிய திருநாவுக்கரசர், ஆறாம் திருமுறை சேத்திரக்கோவை திருத்தாண்டகத்தில் (திருவீழிமிழலைப் பதிகம்) தஞ்சாவூரைத்

"தஞ்சை" என்றும், தஞ்சையிலிருந்த கோயில் சிவனைத் "தஞ்சைத் தளிக்குளத்தார்" என்றும் பாடியிருக்கிறார். இக்கோயில் தளிக்குளத்தையொட்டி அமைந்த கோயிலாகவோ அல்லது தளிக்குளத்தின் நடுவில் அமைந்த கோயிலாகவோ இருக்கலாம்.

திருநாவுக்கரசர் கி.பி.6–7ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். ஆதலால் "தஞ்சை" மாநகரம் கி.பி.6–7ஆம் நூற்றாண்டளவிலேயே இருந்திருப்பது தெரியவருகிறது. ஏறக்குறைய இதே காலக்கட்டத்தைச் சார்ந்த திருச்சிராப்பள்ளி மலையின் பாறைக் கல்வெட்டொன்று "தஞ்சஹரக" என்று குறிப்பிடுகிறது. "தஞ்சஹரக" என்பது "தஞ்சையை வென்றவன்" என்ற பொருளைத்தரும். அக்காலத்தில் தஞ்சைப் பகுதியைத் தம் ஆட்சியின்கீழ்க் கொண்டுவந்தவன் பல்லவ மன்னன் மகேந்திரவர்மனே ஆவான். ஆதலால் "தஞ்சஹரக" என்பது மகேந்திரவர்மனின் பட்டப்பெயராக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. தஞ்சாவூர் வடமொழியாளர்களாலும் "தஞ்சை" என்றே எழுதப்பெற்று வந்திருப்பது புலனாகிறது.

## ஆழ்வார்கள் பாசுரங்களில் தஞ்சை

முதலாழ்வார்களான பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார் ஆகியோரில் பூதத்தாழ்வார், இரண்டாம் திருவந்தாதியில், திருமால் வாழ்கின்ற தளங்களாகச் சிலவற்றைக் குறிப்பிடுகையில் "தமருள்ளம் தஞ்சை" என்று தஞ்சையிலும் ஒரு வைணவக் கோயில் இருந்ததென்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார். இவரது காலம் கி.பி.7ஆம் நூற்றாண்டாகும்.

கி.பி.8ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருமங்கையாழ்வார் தெய்வப்பனுவப் பாடல்களில் தஞ்சை மாநகர் பற்றி குறிப்பிட்டுள்ளார். தஞ்சையிலிருந்த "பெருமாள் கோயிலை" "வம்புலாஞ்சோலை மாமதிற் தஞ்சை மாமணிக்கோயில்" என்றும், "தடம் பருகு கருமுகிலைத் தஞ்சைக் கோயில் தவநெறிக்கோர் பெருநெறியை வையங்காக்கும் கடும்பரிமேல் கற்கியை நான் கண்டுகொண்டேன்" என்றும், பிறிதோரிடத்தில் "தஞ்சை யாளியைப் பொன்பெயரோன் நெஞ்சம் அன்றிடந்தவனை" என்றும் தஞ்சைத் திருத்தலத்தில் அமைந்திருந்த வைணவத் திருக்கோயில்களையும், தஞ்சை மாநகரின் சிறப்புத் தன்மையையும் அழகாகப் போற்றிப் பாராட்டியிருக்கிறார்.

## முத்தரையர் காலத்தில் தஞ்சை

பல்லவர்களின்கீழ் சிற்றரசர்களாக ஆட்சி செய்த முத்தரையர்கள் "தஞ்சை", "வல்லம்" ஆகிய பகுதிகளைத் தங்கள் ஆளுகையின்கீழ் அடங்கிய பகுதிகளாகக்கொண்டு ஆட்சி புரிந்திருக்கின்றனர். ஆதலால்தான் செந்தலைத் தூண்களில் பொறிக்கப்பெற்றுள்ள இவர்களது பாடற்கல்வெட்டுகளில் புலவர்கள் இம் மன்னர்களைப் புகழ்ந்து பாடியபோது,

**"தஞ்சைத் திறம் பாடி நின்றார்"** – என்றும்,

**"வஞ்சிப்பூச் சூடிய வானமருள் வாகைப்பூ**
**குஞ்சிக் கமழ்கண்ணிக் கோமாறன் – தஞ்சைக்கோன்"**

*- என்றும், "தஞ்சை நற்புகழான்" என்றும் "தஞ்சை செம்புல நாட்டை"யுடைய "வல்லக்கோமாறன்" என்றும் பாராட்டப் பட்டிருக்கின்றனர்.*

**சோழர் கைப்பற்றியத் தஞ்சை**

கழகக் காலச் சோழர்களுக்குப் பிறகு சோழநாடு களப்பிரர், பல்லவர் மற்றும் பாண்டியர் ஆட்சிக்குட்பட்ட பகுதியாக மாறிமாறி விளங்கியது. கி.பி.9ஆம் நூற்றாண்டளவில் பல்லவர்களுக்கு அடங்கியச் சிற்றரசாக விளங்கிய முத்தரையர்களின் ஆட்சிப் பகுதியாகத் திகழ்ந்தது. குடந்தைக்கு அருகிலுள்ள பழையாறையில் நலிந்து போயிருந்த சோழர்கள் ஓரளவுக்கு வலிமைபெற்று வேறு சில சிற்றரசர்களின் துணையுடன் காஞ்சிபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த பல்லவரை எதிர்க்கத் தலைப்பட்டனர். சோழவேந்தன் விசயாலயன் பல்லவன் கம்பவர்மனை எதிர்த்துப்போரிட்டு, அவனைத் தோற்கடித்துவிட்டுத் தஞ்சையைக் கைப்பற்றிக்கொண்டான் என்று அண்மையில் கிடைத்துள்ள முதலாம் இராசஇராசனுடைய திருஇந்தளூர்ச் செப்பேடு கூறுகிறது.

வரலாற்றாசிரியர்கள் இச்செப்பேடு கிடைக்கும்வரை விசயாலயச் சோழன் முத்தரையர்களிடமிருந்துதான் தஞ்சையைக் கைப்பற்றினான் என்று கருதினார்கள். அக்கருத்து இப்போது முறியடிக்கப்பட்டுவிட்டது. முதலாம் இராசேந்திரன் காலத்துத் திருவாலங்காட்டுச் செப்பேடும், வீரஇராசேந்திரனின் குமரிக் கல்வெட்டும் விசயாலயச் சோழர் தஞ்சையைக் கைப்பற்றியதை விரிவாகப் பேசுகின்றன. ஆனால் அவன் யாரிடமிருந்து தஞ்சையைக் கைப்பற்றினான் என்பதைக் கூறவில்லை. தஞ்சை மாநகரம் சுண்ணத்தால் அமைக்கப்பெற்ற மாடமாளிகைகளோடு, 'குபேரனின்' அழகாபுரிக்கு ஒப்பாகப் பெருநகரமாக விளங்கியது என்றும், 'நிசும்பசூதனி' என்ற காளிதேவியைத் தஞ்சையில் நிறுவினான் என்று மட்டும் விரித்துரைக்கிறது.

குமரிக் கல்வெட்டோ, விசயாலயச்சோழன் பிரமாதி தேவர்களால் அமைக்கப்பெற்ற "தஞ்சாபுரி" எனும் நகரைப் பல புதிய வழிமுறைகளைப் புகுத்தி மேலும் சிறப்புப் பொருந்திய நகரமாக விரிவுபடுத்தினான் என்று கூறுகிறது.

**சோழர்கள் காலத்தில் தஞ்சை மாநகர்**

விசயாலயச் சோழர் காலம்முதல் முதலாம் இராசராசன் காலம்முடிய தஞ்சை மாநகர்தான் சோழர்களின் தலைநகராக விளங்கி வந்திருக்கிறது. விசயாலயச் சோழனை அடுத்து ஆட்சி புரிந்த ஆதித்யன் தஞ்சையம்பதியில் இருந்தே கோலோச்சினான் என்பது "கொங்குதேச ராசாக்கள் சரித்திரத்தால்" உணரமுடிகிறது.

பாண்டிய மன்னன் இரண்டாம் இராசசிம்மனின் சின்னமனூர்ச் செப்பேடுகள், பராந்தகச் சோழனைத் "தஞ்சையர்கோன்" என்று குறிப்பிட்டுள்ளமையால் பராந்தகன் தஞ்சையிலிருந்துதான் ஆட்சி புரிந்திருக்கிறான் என்பது புலனாகிறது.

பராந்தகன் மகனான கண்டர் சூரியன் (கண்டராதித்தன்) காலத்திலும் தஞ்சை மாநகரே தலைநகராகத் திகழ்ந்திருக்கிறது என்பது, அவரால்

இயற்றப்பெற்ற திருவிசைப்பாவில் காணப்பெறும்,

*“சீரானமல்கு தில்லைச் செம்பொன் அம்பலத்தாடி தன்னைக்*
*காரார் சோலைக் கோழிவேந்தன் தஞ்சையர்கோன் கலந்த*
*ஆராஇன் சொற் கண்டராதித்தன் அருந்தமிழ் மாலை வல்லார்”*

– என்ற வரிகளால் அறிய முடிகிறது.

சுந்தரச்சோழனின் முதல் மகனான ஆதித்த கரிகாலன் காலத்தில் தஞ்சையின் அரண்மனை பெரும் வாயில்களை உடையதாக விளங்கியிருந் திருக்கிறது என்பது முதலாம் இராசேந்திரனது எசாலம் செப்பேட்டால் வெளிச்ச மாயிற்று. அச் செப்பேட்டின் வடமொழிப்பகுதி, “பாண்டிய மன்னனைப் (வீரபாண்டியன்) போர்க்களத்தில்வென்று, அவனது தலையைக்கொய்து, தஞ்சாவூர் வாயிலில் இருந்த பெரிய மரக்கழியின் முனையில் சொருகி வைத்தான்” என்று கரிகாற்சோழனைப் புகழ்ந்து கூறுகிறது.

**முதலாம் இராசராசன் காலத்தில் தஞ்சை மாநகர்**

**தஞ்சை அரண்மனை**

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் பொறிக்கப்பெற்றிருக்கும் கல்வெட்டுகளே, முதலாம் இராசராசன் காலத்தில் தஞ்சைமாநகர் எத்தகைய நகரமைப்பால் (Town Planning) விளங்கியிருந்திருக்கிறது என்று காட்டுவதற்குப் போதுமான சான்றுகளாகும். முதலில் தஞ்சையில் இருந்த அரண்மனையைப்பற்றி கூறும் கல்வெட்டின் வரிகளைக் காணலாம்.

*“உடையார் ஸ்ரீராஜராஜதேவர் தஞ்சாவூர்க் கோயிலினுள்ளால்*
*இருமடிசோழனின் கீழைத் திருமஞ்சன சாலை தானஞ்செய் தருளாவிருந்து”*

என்பது அவ்வரிகளாகும். பிறிதோரிடத்தில் தஞ்சை அரண்மனையின் பெயர் “இராஜாஸ்ரயன்” என்று கூறப்பெற்றிருக்கிறது. இவ்வரண்மனையில் பெரிய செண்டு வாயில் என்று ஒரு பெரிய வாயிலும் சித்திரக்கூடமும் இருந்திருப்பது திருவண்ணாமலை மாவட்டம் “உக்கல் ” என்னும் ஊரிலுள்ள கல்வெட்டால் தெரியவருகிறது.

**தஞ்சை மாநகரம்**

தஞ்சை மாநகரம் “உள்ளாலை” மற்றும் “புறம்படி” என்று இரு பிரிவுகளாகப் பிரிந்திருந்திருக்கிறது. “உள்ளாலை” என்பது நகரின் உட்பகுதியாகும். “புறம்படி” என்பது நகரின் புறப்பகுதி (வெளிப்பகுதி) யாகும். உள்ளாலையில் “பாண்டிவேளம்” “சாலியத்தெரு” ஆகிய இரு தெருக்களே அமைந்திருந்தன. புறம்படிப் பகுதியில் தான் மிகுந்த அளவில் தெருக்கள் இருந்திருக்கின்றன.

**தஞ்சைப் பெருவுடையார் கோயில்**

இக்கோயில் “பெரிய கோயில்” என்றும், “தக்கணமேரு” என்றும் வழங்கப்பெறும். பெருவுடையார்கோயில் என்பது வடமொழியில் “பிரகதீசுவரர்கோயில்” என்று அழைக்கப்படுகிறது.

இது துணைமேடையிலிருந்து (உபபீடத்திலிருந்து) கலச முனைப்பகுதி (தூபி) வரை 216 அடி உயரமுடையது. கிழக்குத் திசை நோக்கி நிற்கும் இப் பெருங்கோயில் இரண்டு திருச்சுற்றுகளைப் பெற்றுத் திகழ்ந்திருக்கவேண்டும். முதல் திருச்சுற்றின் நுழைவு வாயில் 'கேரளாந்தகன் திருவாசல்' என்றும், இரண்டாம் திருச்சுற்றின் நுழைவாயில் 'இராசராசன் திருவாசல்' என்றும் கல்வெட்டுகளில் காணமுடிகிறது. இக்கோயிலில் உண்ணாழியையொட்டிய உட்திருச்சுற்றின் இரு பக்கச் சுவர்களிலும் சோழர்கால ஓவியம் அழகாகத் தீட்டப்பெற்றிருக்கிறது. சுந்தரரை இறைவன் தடுத்தாட்கொண்ட கதையும், சுந்தரரும் சேரமான் பெருமாள் நாயனாரும் கைலாயம் சென்று சிவபெருமானை வழிபட்ட கதையும், சோழப்பேரரசன் முதலாம் இராசராசனும் அவனது பட்டத்தரசிகளும் தங்கள் குல தெய்வமான ஆடல்வல்லானை உள்ளன்போடு தில்லை நடராசர் அம்பலத்தில் வழிபடுகின்ற காட்சியும் மிகச் சிறப்பாக வண்ண ஓவியத்தில் வரையப்பெற்று காட்சியளிப்பது உலக அளவில் காணப்படுகின்ற ஓவிய வரிசையில் சிறப்பான இடத்தைப் பெற்றுத் திகழ்கிறது. இக்கோயிலின் கட்டட அமைப்பு, சிற்பச் செழுமை, ஓவிய உயர்வு, செப்புச் சிலைகளின் நேர்த்தி ஆகிய அனைத்தையும் ஒப்புநோக்கித்தான் பன்னாட்டு நிறுவனம் (யுனெசுகோ)உலக அளவில் உள்ள சிறந்த மரபுச் சின்னங்களுள் இதனையும் ஒன்றாக தேர்ந்தெடுத்திருக்கிறது.

**பெரியகோயில் கல்வெட்டுகள்**

இப் பெரியகோயிலில் மொத்தம் 107 கல்வெட்டுகள் காணப்பெறுவதாக வெங்கடராமன் என்ற அறிஞர் தம் நூலில் எழுதியிருக்கிறார். ஆனால் இக் கட்டுரையாசிரியருக்குத் தெரிந்த வகையில் மொத்தம் 90 கல்வெட்டுகள்தாம் கல்வெட்டு நூல்களில் பதிப்பிக்கப்பெற்றுள்ளன.

முதலாம் இராசராசனும் அம் மன்னனது உறவினர்களும் இக்கோயிலுக்கு அளப்பரியக் கொடைகள் அளித்து மகிழ்ந்திருப்பது கல்வெட்டுகளினால் புலனாகிறது.

ஏறக்குறைய 1,000 ஆண்டுகளுக்கு முன்பாக ஓர் அரசன் தாம் வழிபடும் கோயிலுக்கு இத்தகைய பெரும் மதிப்புள்ள கொடையை வழங்கியிருக்கிறான் என்றால், அவனது அரசு எத்தகையச் செல்வச் செழிப்பு மிக்கதாக விளங்கியிருந்திருக்க வேண்டுமென்பது பெரும் வியப்பை ஏற்படுத்துகிறது.

இக் கோயிலில் பல தரப்பட்ட அலுவலர்கள் பணிபுரிந்திருக்கின்றனர். திருப்பதியம் விண்ணப்பம் செய்வார், தளிச்சேரிப் பெண்டுகள், பண்டாரிகள் (கருவூல அலுவலர்) மாணிகள் (கோயிலில் சிறு பணி செய்வார்), கரணத்தார் (கணக்கெழுதுவோர்), திருமெய்க்காப்பாளர்கள் ஆகியோர் பணியமர்த்தம் செய்யப்பெற்று ஊதியம் வழங்கப் பெற்றிருக்கின்றனர்.

தளிச்சேரிப் பெண்டுகள் (நாட்டியம் ஆடுவார்) மட்டும் 400 பேர் பணியமர்த்தம் செய்யப் பெற்றிருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வேலி நிலம் (ஆண்டு ஒன்றுக்கு 100 கலம் நெல் விளையக்கூடியது) அளிக்கப்பெற்றிருக்கிறது. மொத்தமுள்ள 400 தளிச்சேரிப் பெண்டுகளுக்கும் 400 X 100 = 40,000 கலம் நெல் ஓர் ஆண்டில் வழங்கப்பெற்றிருக்கிறது. நாட்டிய மகளிருக்கு மட்டும் இந்த அளவுக்கு ஊதியம்

வழங்கக்கூடிய அளவிற்குச் சோழ அரசு விளங்கியிருக்கிறது எனில் அக்காலத் தமிழகம் பெரும் செல்வ வளத்தைப் பெற்றுத் திகழ்ந்திருக்கிறது என்று எண்ணுவதில் தவறு இருக்க முடியாது.

### கருவூர்த் தேவரால் பாராட்டப்பெற்ற தஞ்சை

முதலாம் இராசராசன் மற்றும் அவர் அருமை மைந்தன் முதலாம் இராசேந்திரன் ஆகியோர் காலத்தில் வாழ்ந்த கருவூர்த்தேவர் தம் திருவிசைப்பா பாடல்களில் அப்போதைய தஞ்சை மாநகரின் சிறப்பைப் பலபடப் பாராட்டியிருக்கிறார்.

"நீண்டு உயர்ந்ததும், பல அடுக்குகளைக் கொண்டதுமாகிய மாடங்களிலும், மேடைகளிலும் நிலவு தவழ்ந்து செல்வது போன்று காட்சி தரும் மதிலை அரணாகப் பெற்றுள்ள தஞ்சை" என்றும்,

"வடவாற்றின்கண் அமைக்கப்பெற்றதாகிய தண்ணீர் பாயும் தலைமதகில் வாழ்கின்ற முதலைகள் மோதுகின்ற அகழியின் அருகில் உள்ள மதிலால் சூழப்பெற்றுள்ள தஞ்சை" என்றும்,

"உதிர்ந்த மாணிக்கக் கற்களின் குவியல்கள் நிறைந்துள்ள இடமாக அமைந்துள்ள மாடங்கள் நிறைந்ததும் மதிலால் சூழப்பெற்றதுமாகிய தஞ்சை" என்றும் பாடிப் பேருவகை அடைந்திருக்கிறார் கருவூரார்.

அவர் காலத்தில் தஞ்சை மாநகர், பெரும் அகழி, மதில் ஆகியவற்றால் காக்கப்பெற்றும், மாடமாளிகைகள் அமையப்பெற்றும் காட்சி தந்தது என்று உணர முடிகிறது.

### தஞ்சை மாநகர் நிலை தாழ்தலும், தலை நிமிர்தலும்

முதலாம் இராசராசன் காலத்துக்குப் பின், அவரது மைந்தன் முதலாம் இராசேந்திரன் தஞ்சையைப் புறக்கணித்துவிட்டு, கங்கைகொண்ட சோழபுரத்தைத் தம் தலைமையிடமாக மாற்றியதைத் தொடர்ந்து, தஞ்சையின் நிலை தாழ்ந்தது. பின்னர் சோழப் பேரரசு பாண்டியர்களின் எழுச்சியில் முற்றிலுமாக வீழ்த்தப்பட்டது. அதோடு முதலாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனால் கி.பி.1218க்குப் பின்பு தஞ்சையும் உறையூரும் எரியூட்டப்பெற்று தரைமட்டமாக்கப்பெற்றன.

பாண்டியர் காலத்தில் புகழ் மங்கியிருந்த தஞ்சை நகர், பின்பு ஆட்சிக்கு வந்த நாயக்கர், மராட்டியர் ஆகியோர் காலங்களில் மீண்டும் தலைநிமிர்ந்து, சோழர் காலத்தில் தமக்கிருந்த செல்வாக்கோடு கோட்டை அரண்மனை ஆகியவை அமையப்பெற்று, புதுக்கோயில்களும், உருவாக்கப்பெற்றுப் புதுப்பொலிவோடு திகழ்ந்தது.

துணை இருந்த நூல்கள்

1. தஞ்சாவூர் – குடவாயில் பாலசுப்பிரமணியம், திருவாவடுதுறை ஆதீன வெளியீடு
2. இராசராசேச்சுரம் – நடன.காசிநாதன், தமிழ்நாட்டரசு தொல்லியல் துறை வெளியீடு
3. தஞ்சைப் பெரியகோயில் – கே.என்.சேசாத்திரி, சேகர் பதிப்பகம் வெளியீடு
4. வரலாற்றில் தஞ்சை – கு.தாமோதரன், தமிழ் நாட்டரசு தொல்லியல் துறை வெளியீடு

# தமிழ் ஒருங்குகுறியில் மீண்டும் தமிழ் மொழிச் சிதைப்பு முயற்சி!

## தமிழ் இரண்டகர் பொள்ளாச்சியார் கூட்டத்தில் இன்னொரு இரண்டகர் மறவன்புலவு!

**– தஞ்சை கோ. கண்ணன் –**

ஈராண்டுகளுக்கு முன்:

தமிழ் மொழியைச் சிதைக்கவென்று எழுத்தால் பதிவும் செய்து சமற்கிருத, சௌராட்டிர மொழிக்குப் பயன்படத் தோதாகத் தமிழ் ஒருங்குகுறியின் நீட்டித்த பாத்தியில் 26 கிரந்த வரிவடிவைக் வைக்க மேனாள் மாணவ இளைஞர் காஞ்சி மட சீரமணன் நெடிய விளக்க முன்மொழிவு.

தமிழ்மொழியைச் சிதைப்புச் செய்ய கிரந்த ஒருங்குகுறியில் தமிழின் சிறப்பெழுத்துகள் ‘‘எ,ஒ,ழ,ற,ன’’ கடத்தல் பற்றிய தமிழ் இரண்டகர்களான பொள்ளாச்சியார், நாக.கணேசன் முன் மொழிவு.

இதில் நினைவில் கொள்ள வேண்டிய செய்தி யாதெனின் இழிவான இச்செயல்கள் கமுக்கமாக எங்கோ 14,000 கி.மீ. தொலைவில் அமெரிக்கப் பெருவள நாட்டில் கலிஃபோர்னிய நகரில் ஒருங்குகுறி சேர்த்தியத்தில் கரவு நாடகம் அரங்கேறியது.

இந்தப் பேருலகில் வாழும் 12 கோடித் தமிழர்களின் மொழியை யாரும் அறியாவண்ணம் இரண்டு தனி மாந்தர்கள் சிதைக்கக் கூடினர்.

காஞ்சி மட சீரமண சருமா, நாக.கணேசனை ‘‘நீ யார் கிரந்த ஒருங்குகுறிக்குள் தமிழ் எழுத்துகளை நுழைக்க?’’ என்று எழுப்பிய வினா இந்த இரண்டகர்களுக்குள் கிளைத்தச் சண்டை வழியாக இச்செய்தி வெளிப்பட, அப்போதுதான் கணினி உலகத்தமிழ் ஆர்வலர்கள், பொறிஞர்களுக்கு ஏதோ தீங்கு நடக்கிறது என்ற அளவில் விழித்தெழுந்தார்கள்.

ஒருங்குகுறி இடியாப்பச் சிக்கலுக்கு இப்போதுள்ள அளவு விழிப்போ, அறிவோ ஈடாகாது. அவ்வறிஞர்களோடு, கணினி நுட்பமும், ஒருங்குகுறி நுட்பமும், தமிழும் அறிந்த அறிஞர்களைக் கொண்டு இதனைச் சரிசெய்தல் நம் கடமை.

இருப்பினும் ஈராண்டுகட்கு முன்னர்த் தமிழுலகமே திரண்டு கொதித்து எழுந்தது. ஆனால் யானையைத் தேடிய குருடரின் நிலை நம் நிலை – இது இரண்டாவது உண்மை!

இவற்றைப் பின்புலமாகக் கணக்கில் கொண்டால்தான் அந்த முதலாம் ஒருங்குகுறி தமிழ் அழிப்பு எவ்வாறு எதிர்கொள்ளப்பட்டது, அதில் நாம் கற்றுக்கொண்ட பாடங்கள் என்ன என்பன போன்ற நிலைகள் வெளிப்படும்.

தினமணி ஆசிரியுரை : ஒருங்குகுறி சேர்த்தியத்தில் ‘‘ஸ, ஷ, க்ஷ, ஜ, ஹ‘‘ எதிர்ப்பு சரியல்ல என்று தமிழ் ஒருங்குகுறியில் கிரந்தக் கலப்பை ஏற்றுக் கொண்டு தினமணி ஆசிரியவுரையில் ஆசிரியர் வைத்தியநாதன் மேனாள் முதல்வரைக் கடுமையாகச் சாடினார்.

ஆனால் மறுநாள் தினமணியில் மேனாள் தமிழ்ப் பல்கலைகழகத் துணைவேந்தர் ம.இராசேந்திரன் தமிழின் சிறப்பு ஐந்தெழுத்துகளைக் (‘‘எ,ஒ,ழ,ற,ன’’) களவாடி கிரந்த ஒருங்குகுறிக்குக் கடத்துவதில்தான் இந்தச் சிக்கல் என்றும், இதைத் தவிர மேற்கொண்டு 26 கிரந்த வரிவடிவத்தை நீட்டித்த நீட்சித் தமிழாகத் தமிழுக்காக ஒதுக்கப்பட்டிருத்தில் உள்ள தனிப் பாத்தியில் செருகுவது தமிழுக்கு ஏற்பட்டிருக்கும் சிக்கல் என்றும் பொதுவில் போட்டு உடைத்தார்.

மேற்கூறியவாறு கரவுச்செய்திள், நமக்குக் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தி, அப்போதைக்கு மொழிக்கு வந்த இடர் தடுக்கப்பட்டதாக நாம் அனைவரும் நம்பினோம்.

சென்ற ஆண்டு முடிவில், 10 கோடித் தமிழர்களின் எதிர்ப்பையும் மீறி பொள்ளாச்சியாரின் கையாளாக அமெரிக்க பெருவள நாட்டில் நல்ல பதவியில் நலமாக அமர்ந்துகொண்டுள்ள, நாக.கணேசன் என்ற தனிமாந்தன், தன் தாயே கேடுற, கலிபோர்னியாவில் சிறப்பெழுத்து ஐந்தில் "ழ, ன " ஈரெழுத்தைக் களவாடி கிரந்த ஒருங்குகுறியில் நுழைக்க, வேற்றான் – ஆங்கிலன் மைக்கேல் எவர்சன் என்றவனை முன்மொழியச்செய்து, மிகச் சரியெனத் தானே வழிமொழிந்து, மறவன்புலவு சச்சிதானந்தன் என்ற ஈழப்பெருமகனின் (?) பரிந்துரைக் கடிதம் பெற்று நீட்டி முன்மொழிந்துள்ளார். ம. பு. ச அவர்களும் இந்த இரண்டகர் வலையில் விழுந்தார். எங்களின் திறந்த மடல்வழி கடும் கண்டனத்தையும், தன் தவறை நேர் செய்ய விடுத்த வேண்டுகோளையும் கடுஞ்சொல் கூறி மறுத்த மறவன்புலவு அவர்களும் பெரிய மாந்தனாகக் காட்டிக்கொண்டு தமிழகத்தில் வலம் வருவது வெட்கக்கேடான செயல்.

## அறிஞர்கள் தடுத்த ஈரெழுத்துக் களவாடல்:

நாக.இளங்கோவன் அவர்கள் தன் "நயனம் வலைப்பதிவில்", "இவர்களின் முன்னீடுகள், பரிந்துரைகள் அனைத்தையும் வெளியிட்டு அவர்களின் கரவான செயல்களை வெளிப்படுத்தியிருந்தார். தமிழ் இணையக் கல்விக் கழகத்தின் இயக்குநர் முனைவர் நக்கீரன் அவர்கள் இம்முயற்சியை எதிர்த்து சேர்த்தியத்திற்குக் கடிதம் எழுதினார். அமெரிக்கத் தமிழறிஞர் சு.பழனியப்பன் மிக வலுவான ஆய்வுக் கட்டுரை எழுதி, இவ் எழுத்துகளைக் கலப்பதற்கு எதிர்ப்புக் கூறிச் சேர்த்தியத்திற்கு அனுப்பினார். கோவை தொல்லியல் துறையைச் சேர்ந்த முனைவர் சாந்தலிங்கம் மறுப்பினையும் பொருத்தமற்ற முன்னீடு என்பதையும் கூறி கடிதம் எழுதினார். இது தேவையற்ற செயல் என்றும், இதனால் நலமில்லை என்றும் கூறி திரு.இரமணசர்மா சேர்த்தியத்திற்கு விளக்கி எழுதினார். திரு.நூ.த.உலோகசுந்தரம் அவர்களும் தனது மறுப்பினை மிக வலுவாகச் சேர்த்தியத்தில் பதிவு செய்தார். இவர்களின் எதிர்ப்பினால், சனவரி – பெப்புருவரியில் கூடிய சேர்த்தியம் இது குறித்து எந்த முடிவும் எடுக்காமல் தள்ளி வைத்திருக்கிறது. மீண்டும் சேர்த்தியம் கூடும்போது (ஓரிரு மாதங்களில்) இது குறித்து முடிவெடுக்கக் கூடும்.

இது தமிழ் – ஒருங்குகுறியின்இரண்டாம் அழிப்பின் இப்போதைய நிலை.

### மொழிக் கேடு : 1

பல ஆண்டுகட்கு முன்னரே நடுவணரசு, தமிழ் மொழியை "அபுகிடா" மொழி வகையில், தேவநாகரி உள்ளிட்ட எழுத்துகளுடன் தெரிந்தே சேர்த்தார்கள் என்பதும் அனைத்து இந்திய மொழிகட்கும் ஒரே எழுத்துவகை மாற்றத்தின் வரைவு அடிப்படையில் செயல்பட்டார்கள் என்பதும் தெளிவாகப் புரியவரும்.

### மொழிக்கேடு : 2

OBE4 : 0964 தேவநாகரி தண்டா , OBE5 : 0964 தேவநாகரி தண்டா உள்நோக்கத்துடன், தன் கொள்கை வரைவிற்கு இணங்க நடுவணரசு தேவநாகரி வரிவடிவத்தைப் எதிர் வருங்காலத்தில் தமிழ் மொழியின் வரிவடிவமாகக் கமுக்கமாகப் புகுத்தத் தமிழ்ப் பாத்தியில் காலியிடமாக வைக்கப்பட்டுள்ளது.

**மொழிக்கேடு : 3**

இவை ஒருங்குகுறிச் சேர்த்தியத்தால் பல ஆண்டுகட்கு முன்னரே புகுத்தப்பட்டது என்ற ஒரே காரணத்தால், கிரந்த வரிவடிவைத் தவறாகத் தமிழ் வரிவடிவமாக நடுவணரசு பதிவு செய்தது சரியா? எப்போது கிரந்த வரி வடிவம் தமிழ் வரிவடிவமாக மாற்றம் பெற்றது? மொழிக்கேடர்கள் ஆய்வறிஞர் !

**மொழிக்கேடு : 4**

அதே நடுவணரசு இந்த ஐந்தெழுத்துகளை கிரந்த வரிவடிவமாகக் குறிப்பிட்டது ஏன்? அங்கே தமிழ் வரிவடிவம்?

தொல்காப்பியம் என ஓர் இலக்கண நூல் உள்ளதே ! நன்னூலும் காணாத தமிழிலக்கணம் நம் நடுவணரசின் தமிழிலக்கணம். தமிழ்நாட்டரசுக்கு அறிவிக்காமலும், கலக்காமலும் மாநில மொழி இலக்கணத்தை மாற்றிய பெருமைமிகு அரசே நடுவணரசு ! ஒருவேளை உச்ச வழக்குமன்றம் தலையிட வேண்டுமோ?

நடுவணரசின் இரட்டை நிலைப்பாடு, உள்நாட்டில் என்றால் கூட புரியும். பொது நிலையில் உலக அளவில் எங்கோ உள்ள சேர்த்தியத்திடம் போய்க், கிரந்த வரிவடிவை ஒருபக்கம் தமிழ் வரிவடிவம் என்று வேண்டுமென்றே சொல்லியும், பின்னர் உண்மை நிலையை , அதே எழுத்துகள் கிரந்த வரிவடிவம் என்று கிரந்த ஒருங்குகுறி முன்மொழிதலில் சொல்வது இரட்டைப் புனைவு அல்லவா? புத்திலக்கணம் படைத்த அருவினை ! ஒரு நாட்டின் அரசே தமிழிலக்கணத்தை மாற்றிய அருஞ்செயல். ஆள்வோர் மொழிக்கிலக்கணம் படைத்திட்ட அருவினை ! உலகம் காணா அருவினை !

**மொழிக்கேடு : 5**

தமிழ்மொழியில் பயன்பாட்டில் இல்லா வரிவடிவம் என்றே குறிப்பிட்டு, தொல்காப்பியம் காணாவரிவடிவம், அதற்கும் தமிழ் ஒருங்குகுறிப் பாத்தியில் ஒதுக்க நடுவணரசுக்குதான் முடியும்.

தொல்காப்பியம் கண்ட தமிழ் வரிவடிவமான ஃ ஆயுத எழுத்தை 'விசர்கா' என அவர்கள் குறிப்பிட நம் தமிழ்மொழி இலக்கண நூலான தொல்காப்பியமும், நன்னூலும் எதற்கு? நம் இருப்பும் எதற்கு?

**மொழிக்கேடு : 6**

தமிழ்மொழிச் சிதைப்பில் இந்திய அரசுக்குத் துணையாகவும் கையாளாகவும் இருந்து கொண்டு திரு.நாக.கணேசன் அவர்கள் தமிழ் ஒருங்குகுறியில் கிரந்தத்தைக்கொண்டு இவ்வாறு தொடர்ந்து குழப்பத்தை உருவாக்கி வருகிறார். தமிழறிஞர்களின் எதிர்ப்பு கிளம்பி அம்முயற்சி முறியடிக்கப்பட்டுவிட்ட பின்னும் வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் யாரையாவது வைத்து முன்மொழியச் செய்வதும் யாரிடமாவது அதற்கு பரிந்துரை மடல் வாங்குவதுமான செயற்பாடுகளில் ஈடுபட்டு விடாமுயற்சியாகத் தமிழைக் கெடுக்கும் பணியைச் செய்து வருகிறார்.

ஈழத்து அறிஞர் மறவன்புலவு புதிய இரண்டகராக இவருக்குக் கிடைத்திருக்கிறார். இரண்டகர்களாகிவிட்டால் எப்பேர்பட்ட அறிஞரையும் தமிழுலகம் தூக்கியெறியத் தயங்காது என்பதை அவர்கள் நினைவிற்கொள்ள வேண்டும். □

# பாட்டரங்கம்

## கொடுங்கோலனுக்குத் தண்டனை வழங்குக !

– திருக்குறள் நாவை.சிவம் –

ஈழத்தை வென்றெடுத்தே உரிமையினை நாட்ட
எழுச்சியுடன் புலிமறவர் துணிந்தெழுந்தே துன்ப
ஆழத்தில் புதைந்திருக்கும் மக்களினைக் காக்க
அன்றாடம் போரிட்டார் ! எதிர்நீச்சல் போட்டார் !
வேழத்தின் பாய்ச்சலினைப் பொறுக்கமுடி யாமல்
வெறிபிடித்த காடையர்கள் சூழ்ச்சிபல செய்து
வாழத்தான் முடியாமல் துமுக்கியினால் வீழ்த்தி
வரலாற்றில் கறைபதித்தார் தமிழ்க்குலத்தைச் சாய்த்தார் !

தொல்லைகளைச் சுமந்துகொண்டே எஞ்சியிருப் போர்கள்
சோறின்றி, நீரின்றி, உறைவிடமும் இன்றி
எல்லையிலா துன்பத்தில் இருந்துழல்கின் றாராம் !
இனியதமிழ்க் கோவிலினை; கல்லறையை எல்லாம்
சொல்லுதற்கே எச்சமின்றித் தரைமட்ட மாக்கிச்
சூதுசெயும் சிங்களத்தான் தம்மிருப்பாய் மாற்றி
வல்லரக்கன் இராசபட்சே கொடுமைசெயும் போக்கை
வையத்தின் பொதுமன்றம் தடுக்கவில்லை இன்னும் !

இடியேறாய்ப் போரிட்ட கதிர்க்கையன் பெற்ற
எழில்மகனை இளங்குருத்தை விடுதலையின் பிஞ்சை
கடிதாக அழித்துவிட்டான் கழிவிரக்கம் இன்றி !
கவின்முகத்தைப் பார்த்தாலே துடிக்கிறது நெஞ்சம் !
அடிமையிலும் அடிமையெனும் அன்னைத்தமிழ் நாட்டார்
ஆர்த்தெழுந்த சிலர்தவிர பலர்அமைதி கொண்டார் !
நெடுநாளாய் நம்கொப்பூழ் குடிமரபு மாய்ந்து
நிலைகலங்கும் நிலைமாறும் நாள்எந்த நாளோ?

பன்னாட்டின் ஒன்றியத்து மாமன்றம் பார்க்க
படுகொலைகள் செய்துவரும் இராசபட்சே மீது
முன்னோட்ட அறிக்கைதந்தும் எதிர்ப்புணர்வைக் காட்டி
முடிவுசெயும் வேளையிலும் இந்தியத்தாய் நாடு
தன்னாட்டின் குரலொலிக்கத் தயங்குவதும் ஏனோ?
தறிகெட்ட கொடுங்கோலன் குற்றவாளி என்றே
முன்னீட்டித் தண்டனையை வழங்குங்கள் ! வைய
முறையீட்டை செவிமடுத்தே ஈழத்தைக் காப்பீர் !

# ஓரணியில் இணைக !

– முனைவர் கடவூர் மணிமாறன் –

சிங்களவர் முதன்மையிடம் பெறுவ தற்கும்
செந்தமிழர் அடையாளம் அழிப்ப தற்கும்
எங்கெங்கும் படையினரை நிறுத்தி வைத்தே
எஞ்சியுளோர் வாழ்வினையும் முடக்கி விட்டான் !
மங்காத புகழ்வாய்ந்த தமிழி னத்தார்
மறுபடியும் தலைநிமிரக் கூடா தென்றே
வெங்கொடியன் வெறிச்செயலைத் தடுப்பார் இல்லை;
விதையாவும் முளைத்துவரும்; விடியல் தோன்றும் !

அதிகாரத் திமிர்கொண்ட அரச பட்சே
ஆட்டமெலாம் அடங்கும்நாள் என்றோ? இன்னும்
எதிர்வினைகள் ஆற்றாத உலக நாடோ
இமைதிறந்தே உறங்குகிற கொடுமை என்னே !
கதறியங்கே துடிக்கின்ற தமிழி னத்தார்
கண்ணீரைத் துடைக்கின்ற வழியும் யாதோ?
பதவியெனும் நாற்காலி படுத்தும் பாட்டில்
பழிச்சேற்றை இறைத்தவண்ணம் இங்குள் ளாரே !

உலகோரின் கண்களிலே நெருப்பைத் தூவி
ஒவ்வாத போர்க்குற்றம் இழைத்தோன் தன்னை
உலகத்தார் பொதுமன்றில் நிறுத்தி வைத்தே
உரியபெரும் தண்டனையை வழங்கல் வேண்டும்;
புலம்பெயர்ந்த தமிழரெலாம் திரும்பி மீண்டும்
புதுவாழ்வைச் சமன்மையுடன் தொடங்கல் வேண்டும் !
நலமுறவே பொதுவோலைக் கணக்கெ டுப்பை
நடத்தியங்கு தமிழீழம் காணல் வேண்டும் !

பக்கத்து நாடான இந்தி யாவும்
பாக்கித்தான் சீனாவும் துணையி ருக்க
மிக்கபெரும் படைவலிமை பெருக்கிக் கொண்டு
மீண்டிடவே இயலாமல் கொத்துக் குண்டால்
ஒக்கலுடன் ஓரிலக்கம் உயிர்கள் மாய்த்த
உறுபழியைக் கொண்டவனைத் தூக்கில் போட்டுத்
தக்கதொரு பாடத்தைப் புகட்டல் வேண்டும் !
தமிழினமே ! ஓரணியில் இணைக ! வெல்க !

# சிங்கை - மலையகத்தில் நடைபெற்ற பாவலரேறு ஐயாவின் 80ஆம் ஆண்டுவிழா கனிச்சாறு வெளியீட்டு விழா நிகழ்ச்சிகள்

கனிச்சாறு பாடல்தொகுதி தொகுக்கும் பெருமுயற்சியின்போதே அதனைத் தமிழகத்தில் வெளியிட்டபின் மலையகத்திலும் வெளியிடவேண்டுமென்றும் திட்டமிட்டோம்.

சென்றமுறை மலையகம் சென்றபோது இச்செய்தியினை நடுவாகக்கொண்டே மலையகத் தமிழ் அன்பர்களிடம் கலந்தோம். அப்போது "ஈப்போ" நகருக்குச் செல்லவுமில்லை; அங்குள்ள அன்பர்களிடம் பழக்கம் ஏற்பட வாய்ப்புமில்லை. ஆனால் அங்குள்ள **'மலேசிய நண்பன்'**, **'மக்கள் ஓசை'** போன்ற நாளிதழ்களின்வழி செய்தியறிந்து தொடர்புகொண்ட அன்பர்கள் பலருள் ஒருவராக ஈப்போவிலிருந்து **பாவலர் முத்துப்பாண்டியன்** அவர்கள் தொலைபேசியில் தொடர்புகொண்டு பெரிதும் உசாவினார்.

ஈப்போவில் **குறிஞ்சிக்குமரனார்** மட்டுமே நம் நெஞ்சில் நிலைத்திருந்தார். 1960களில் தென்மொழியில் அவரைப்பற்றிய செய்தி படத்துடன் வந்திருந்தது. ஈப்போவில் 'பாவாணர் தமிழ் மன்றம்' அமைத்துத் தமிழ்த்தொண்டாற்றிய பெருமகனார் அவர். பல தமிழ் செயற்பாட்டுள்ளங்களை உருவாக்கிய அவரின் பெருஞ்செயல்கள் எண்ணற்றவை. அவரைப் பின்பற்றிச் செயலாக்கம் கொண்ட மறைந்த கிள்ளாங்கு **அ.பு.திருமாலனார்** முதல் இன்று அருந்தொண்டாற்றி வருகிற மலேசியத் தமிழ்நெறிக் கழகத் தேசியத் தலைவர் **க.திருமாவளவன்** வரை பலருக்கும் தென்மொழியோடு அணுக்கம் உண்டு.



குறிஞ்சிக்குமரனார்

ஈப்போ குறிஞ்சிக்குமரனார் தொடங்கிய பாவாணர் தமிழ் மன்றம் அவருக்குப்பின், இடைக்காலத்தில் செயற்பாடு குன்றிய நிலையில் அதை மீண்டும் புதுப்பிக்கச் செய்யும் எண்ணம் தோன்றிப் பல வடிவங்களில் புதுப்புதுப் பெயர்களில் பலராலும் அமைப்புகள் தொடங்கப்பட்டும் இருந்திருக்கின்றன. அங்குள்ள தமிழுள்ளங்கள் சில பொதுவான பெயரில் **'முத்தமிழ்ப் பாவலர் மன்றம்'** என்னும் அமைப்பைத் தொடங்கி அதைச் செயற்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளனர்.

அச்செயற்பாட்டிற்கு அக்காலத்திலிருந்து குறிஞ்சிக்குமரனாருடன் தொடர்பிலிருந்த சில மூத்த அன்பர்கள் பலரும் உடனிருந்த நிலையில் அதைச் செயற்படுத்த முனைப்புக் காட்டிய செயற்றிறம் மிக்க தமிழுள்ளத்தினர் **பாவலர் அருள் ஆறுமுகம்** என்ற செயல்மாமணியை இங்கு குறித்தே ஆகல்வேண்டும்.

சில மாதங்களுக்கு முன்பு பாவலர் முத்துப்பாண்டியன் அவர்கள் தொடர்புகொண்டு ஈப்போவில் செயற்படத்தொடங்கப்பட்டிருக்கும் முத்தமிழ்ப் பாவலர் மன்றத்தின் சார்பாக ஈப்போவுக்கு வருகைதரவேண்டும் என்றும் அம்மன்றத்தின் சார்பாக அதன் செயலாளர் பாவலர் அருள் ஆறுமுகம் தொடர்புகொள்வார்கள் என்ற செய்தியை நம்மிடம் கூறியதையடுத்து முறையாக,

அம் மன்றத்தின் தலைவராக இருந்து இப்போது செயலராகச் சிறப்பாகப் பணியாற்றிவரும் பாவலர் அருள் ஆறுமுகம் நம்மிடம் பேசினார். சென்னை வரும்போது நேரில் சந்திப்பதாகக் கூறினார். மலேசியப் பாவலர்கள் கலந்துகொள்ளும் நிகழ்ச்சியொன்றிற்குச் சென்னை வந்திருந்த பாவலர்கள் அருள் ஆறுமுகம், முல்லைச்செல்வன் இருவரையும் சந்தித்தபோது, மன்றத்தின் செயற்பாடுகள் பற்றியும் நாம் வரவேண்டிய தேவைபற்றியும் கூறினர். அப்போது மறைமலையடிகளாரின் பெயரனும் பேரா.மறை.திருநாவுக்கரசு அவர்களின் மகனுமான **மறை.தி.தாயுமானவன்** அவர்களை உடன் அழைத்துச் சென்றிருந்தோம்.

மறைமலையடிகளின் பெயரில் அறக்கட்டளை தொடங்கிப் பணியாற்றிக் கொண்டிருக்கும் மறை.தி.தாயுமானவன் அவர்கள் நம்முடன் மலையகம் வர விரும்புவதைப் பற்றியும் மறைமலையடிகள் வரலாற்றைப் பரப்பினால் அது தனித்தமிழ் வரலாற்றையும் தேவையையும் பரப்புவதாகவும் இருக்கும் என்று அவர்களிடம் பேசினோம்.

அவர்களும் மனமுவந்து உடனே இசைந்தனர். தென்மொழி அம்மாவையும் இறைக்குருவனாரையும் இழந்த நிலையையும், கனிச்சாறு வெளியீட்டு விழா ஏற்பாட்டைப் பற்றியும் கூறிச் சற்றுக் காலம் தாழ்த்தி அழைக்குமாறும், மலையகத்திலும் கனிச்சாறு வெளியீடு செய்ய இருக்கும் திட்டத்தைக் கூறி அதற்கு வாய்ப்பளிக்குமாறும் கேட்டுக்கொண்டோம்.

அதனை ஏற்றுக்கொண்டு அவர்கள் விடைபெற்றுச் சென்று அனைத்துச் செயற்பாடுகளையும் செய்தபின் 2013 மார்ச்சுத் திங்கள் 10ஆம் நாளில் நிகழ்ச்சி நடத்தலாம் எனவும் மார்ச்சு 9 ஆம் நாள் புறப்பட்டு வர ஏற்பாடு செய்வதாகக் கூறினர்.

2013 மார்ச்சுத் திங்கள் 10 ஆம் நாளில் பாவலரேறு ஐயாவின் 80ஆம் ஆண்டு நிறைவுறும் நன்னாள் என்பதை அவர்களுக்குத் தெரிவித்தோம். அவர்கள் மிகவும் மகிழ்வுற்று அந்நாளிலேயே சிறப்பு நிகழ்ச்சியாக நடத்துவதற்குப் பொறுப்பு எடுத்துக்கொள்வதாகத் தெரிவித்தனர்.

நாமும் ஒப்புக்கொண்டோம். பாவலரேறு ஐயாவின் 80ஆம் ஆண்டு நிகழ்வைத் தமிழ்நாட்டிலும் நிகழ்த்தவேண்டும் என்ற எண்ணமிருந்ததால் அதையொட்டியே அதற்கு முன்னமேயே மார்ச்சு 3ஆம் நாளைத் தேர்ந்து அதற்கேற்ப கனிச்சாறு தொகுதிகளை அச்சிடும் பணிகளை முடுக்கினோம்.

இலயோலா கல்லூரியில் அந்நிகழ்ச்சி சிறப்பாக நடந்து முடிந்தவுடன் மலையகப் புறப்பாட்டிற்கு அணியமானோம். கனிச்சாறு தொகுதிகள் எடை மிகுந்து இருந்ததால் நம் உடைமைகளை மிகவும் சுருக்கிக்கொண்டு நூல் தொகுதிகளை எடுத்துக் கொண்டோம்.

நம்முடன் நம் துணைவியார் திருவாட்டி கயற்கண்ணி பூங்குன்றன், தாயுமானவன், அவர்களின் துணைவியார் திருவாட்டி வாசுகி தாயுமானவன் ஆகிய நால்வரும் கனிச்சாறு நூல் தொகுதிகள், மறைமலையடிகள் வரலாற்று நூல்கள் ஆகிய எடைமிகுந்த நூல்கட்டுகளைச் சுமந்துகொண்டு, 2013 மார்ச்சு 9ஆம் நாள் காரிக்கிழமை விடியலில் சென்னை விண்ணூர்தி நிலையத்திலிருந்து கோலாலம்பூர் புறப்பட்டோம்.

## கோலாலம்பூர் விண்ணூர்தி நிலையம்

2013 மார்ச்சுத் திங்கள் 9ஆம் நாள் பிற்பகல் 5 மணி யளவில் கோலாலம்பூர் விண்ணூர்தி நிலையம் அடைந்தோம். எங்களைப் பாவலர்கள் **சீரியநாதன், முத்துப்பாண்டியன், வீரக்குமரன், முல்லைச் செல்வன்** ஆகியோர் அன்புடன் வரவேற்றனர். கோலாலம்பூரில் வெளியிடப்பகுதி நூல்களை வைத்துவிட்டு, சில கட்டுகளுடன் ஈப்போ ஏகினோம்.



பாவலர்கள் சீரியநாதன், வீரக்குமரன்,முத்துப்பாண்டியன், முல்லைச்செல்வன் ஆகியோருடன் பூங்குன்றன், மறை.தி.தாயுமானவன் இணையர்கள்

### ஈப்போ

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பே பாவாணர் மன்றம் அமைந்த ஊரான ஈப்போ என்ற நன்னகரில் கால்பதித்தோம். மலேசியாவின் பல்வேறு மாநிலங்களில் ஒன்று பேராக்கு. பேராக்கு மாநிலத்தின் தலைநகர் ஈப்போ. தமிழர்கள் மிகுதியாக வாழும் பகுதிகளில் ஈப்போவும் ஒன்று. மலைகள் சூழ்ந்து இயற்கை வளம் நிறைந்த இடமான ஈப்போ பழைமையும் புதுமையும் கலந்தது.

'ஈப்போ' என்பது ஒரு நச்சு மரத்தின் பெயர். அதன் பால் கொடிய நஞ்சுடையது. மலைமக்கள் ஈப்போ மரத்தின் பாலை அம்பு, ஈட்டிகளின் முனைகளில் தடவி விலங்குகளின்மேல் எய்து வேட்டையாடுவர். அவை உடனே மயங்கி விழுந்துவிடும். கூடுதலாகப் பாலைச் செலுத்தினால்கூட அவை இறந்து போகும்.



இப்போது அவை உட்பகுதிக் காடுகளில் மட்டுமே உள்ளன. நகரில் அடையாளத்திற்காகத் தொடர்வண்டி நிலையத்தின் முன்திடலில் ஒரு மரம் காவல் சுற்றடைப்பினுள் காட்சியாக வைக்கப்பட்டுள்ளது.

மார்ச்சு 9 அன்று இரவு பாவலர் முத்தமிழ்ப் பாவலர் மன்றத்தின் செயலரும் பொதுவாகவே தமிழினத்தின்மீது அன்பும் அக்கறையும் வாய்க்கப்பெற்ற தமிழுள்ளத்தவருமான திரு. அருள் ஆறுமுகம் அவர்களின் இல்லத்தில் இனிய விருந்துடன் கூடிய கலந்துரையாடல் நடந்தது. பாவலர்களும் தமிழ் அன்பர்களும் கலந்துகொண்ட அக்கூட்டம் எங்களுக்கு வரவேற்பு விருந்தாக அமைந்தது.

## பாவலரேறு ஐயாவின் 80ஆம் ஆண்டு விழா

ஈப்போவிலிருக்கும் புந்தோங்கு பகுதியில் உள்ள பெரிய மாரியம்மன் கோயில் சுற்றடைப்பில் அமைந்திருக்கும் பெரியதொரு திருமண அரங்கில் ஈப்போ முத்தமிழ்ப் பாவலர் மன்றத்தின் ஏற்பாட்டில் ஈப்போ ஆசிரியர்ப் பயிற்சிக் கல்லூரியின் தமிழ்த்துறையும் இணைந்து பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் 80ஆம் ஆண்டு விழாவையும் தமிழக அறிஞர்களின் இலக்கியச் சொற்பொழிவையும் 10.03.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியளவில் ஏற்பாடு செய்திருந்தனர்.



திரு.சித்திரைக்கிட்டு தமிழ் வாழ்த்து பாடினார். பாவலர் ம.வீரக்குமரனார் வரவேற்புரையாற்ற மன்றச் செயலர் பாவலர் அருள் ஆறுமுகம் தமிழகத்தின் சிறப்பு விருந்தினரான எங்களை அறிமுகப்படுத்தித் தொடக்கவுரையாற்றினார். பேராக்கு மாநில முதல்வரின் அறிவுரைஞர் **டத்தோ சு.வீரசிங்கம்** தலைமையில் விழா சிறப்பாகத் தொடங்கியது. ஈப்போ ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிப் பேராசிரியர் முனைவர் சுப்பிரமணியம் சிறப்புரையாற்றினார்.

சிறப்புச் சொற்பொழிவுகளாகத் தமிழகத்திலிருந்து சென்றிருந்த நாங்கள் (தென்மொழி மா.பூங்குன்றன், மறை.தி.தாயுமானவன்) இருவரும் உரையாற்றினோம். அதில் உரையாற்றிய நாம், "தமிழ் தனித்தியங்கவல்லது என்பது மட்டுமல்லாமல் அதன் சொற்கள் அனைத்தும் தமிழின் மூலத்தை அடிப்படையாகக் கொண்டே உருவானது. அச்சொற்களில்



பாவலரேறு ஐயாவின் 80ஆம் ஆண்டு விழா, மறைமலையடிகள் நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் பங்கேற்ற திருவாளர்கள்–பாவலர்கள் அருள் ஆறுமுகம், வீரக்குமரனார், முல்லைச்செல்வன், டத்தோ வீரச்சிங்கம், தாயுமானவன், மா.பூங்குன்றன், முத்துப்பாண்டியன், எல்லோன் ஆகியோர்.

தமிழனின் வரலாறு, பண்பாடு, வாழ்முறைகள் ஆகியன பதிவாகியுள்ளன. தமிழனின் தனி வரலாறு அழிக்கப்பட்டாலும் அவை மொழியினின்று மீட்டெடுத்துக்கொள்ளுமாறு உள்ளன. எனவே தமிழில் வேற்றுமொழிச் சொற்கள் கலந்துவிட்டால் வரலாற்று மீட்டெடுப்பு முயற்சி சிதறிப்போகும். எனவே தனித்தமிழ் தமிழனுக்குத் தேவையானதொன்று. அதை மறைமலையடிகள் உருவாக்கிப் பாவாணர், பாவேந்தர், பாவலரேறு எனத் தனித்தமிழ் இயக்கம் தொடர்ந்து காப்பாற்றப்பட்டு செயலாக்கி வருகிறது. அதன் பிறங்கடையர்களாக இருந்து நாம் செயற்பட்டுக்கொண்டுள்ளோம். தொடர்ந்து அதைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயமும் தேவையும் உள்ளன'' என்று உரையாற்றினோம்.

தொடர்ந்து உரையாற்றிய மறை.தி.தாயுமானவன், மறைமலையடிகள் வரலாற்றிலிருந்து பல அரிய செய்திகளை எடுத்துரைத்துத் தனித்தமிழ் இயக்கத்தின் தோற்றத்தையும் அதன் வளர்ச்சியையும் பற்றி அரிய சொற்பொழிவாற்றினார்.

நூற்றுக்கணக்கான அன்பர்கள் கலந்துகொண்டனர். அனைவருக்கும் நண்பகல் விருந்துடன் பாவலரேறு ஐயாவின் 80ஆம் ஆண்டு விழாவை நிகழ்ச்சி மகிழ்வாக நிறைவுற்றது. பாவலரேறு ஐயாவின் 80ஆம் ஆண்டு விழா ஈப்போவில் முத்தமிழ்ப் பாவலர் மன்றம் பொறுப்பெடுத்து அவர்கள் கூறியபடியே நம்மையெல்லாம் அழைத்துச் சிறப்பாக நடத்தியது. அதன் அரும்பெருமைகள் அம் மன்றத்தினர் அனைவரையும் சாரும் என்றாலும் அதனை ஒருங்கிணைத்த செயற்பாட்டிற்கு அதன் செயலாளர் அன்புக்குரிய பாவலர் அருள் ஆறுமுகம் அவர்களின் செயற்பாடு மிகவும் போற்றக்கூடியது. அவர்களை வாழ்நாளில் மறத்தலரிது.

### தஞ்சோங்கு மாலிம், சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக்கழகம்

11.03.2013 திங்கட் கிழமை மாலை பேராக்கு மாநிலத்தில் உள்ள தஞ்சோங்கு மாலிம் நகரில் உள்ள சுல்தான் இட்ரிசு கல்வியியல் பல்கலைக் கழகத்தில் உள்ள வளர்தமிழ்மன்றம் பல்கலைக் கழகத்தின் புத்தாக்க மொழித்துறை விரிவுரையாளர் திரு.கார்த்திகேசு பொன்னையா அவர்களின் தலைமையில்,

**'பழந்தமிழர் கண்ட வானவியல்'**

**'தனித்தமிழ் இயக்க வரலாறு'**

என்ற இரு தலைப்புகளில் மா.பூங்குன்றன், மறை.தி.தாயுமானவன் இருவரும் உரையாற்றும் வகையில் இலக்கியச் சொற்பொழிவு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தது.




தமிழர்களின் எண்கள், தமிழர்களின் வாழ்க்கையில் நாள்காட்டி, காலமுறை மாற்றங்கள், பருவ மாற்றங்கள் அவர்களின் வாழ் முறையமைப்பில் வானியல் பற்றி தெரிந்திருக்க வேண்டிய கட்டாயம், இலக்கியத்தில் வானியல் – கோள் இயக்கங்கள் பற்றிய

பதிவுகள் அனைத்தையும் உள்ளடக்கி நாம் சிறப்புரையாகவாற்றினோம்.

தனித்தமிழ் இயக்கத்தின் தேவைகள் அதன் இன்றைய வளர்ச்சி, தமிழ் மொழிக்காப்பு, தாய்மொழிக்கல்வி இவற்றை நடுவாகக்கொண்டு திரு.தாயுமானவன் சிறப்பான உரையாற்றினார். பல்கலைக்கழக மாணவர்கள் அனைவரும் ஊன்றிக்கேட்டு ஐயவினா எழுப்பி விடைகேட்டு நிறைவடைந்தனர்.




தாப்பா மகளிர் அணி இலக்கியச் சொற்பொழிவு நிகழ்ச்சியில் அமைச்சர் டத்தோ சரவணன் அவர்கள் மறை.தி.தாயுமானவன், தென்மொழி மா.பூங்குன்றன் இருவரையும் பெருமைப்படுத்திய நிகழ்ச்சி.

மாணவர்களுக்கு இரு பொழிவுமே புதியதாகவும் பயனுடையதாகவும் இருந்ததாகக் கூறினர்.

## தாப்பா மகளிர்ப் பகுதி இலக்கியச் சொற்பொழிவு

12.03.2013 செவ்வாய்க்கிழமை மாலை பேராக்கு மாநிலம் தாப்பா தொகுதி மகளிர் அணியும் ‘பெர்வானித்தா’ என்ற அமைப்பின் ஏற்பாட்டிலும் நகரிலுள்ள அம்மனோ என்ற மண்டபத்தில் இலக்கிய நிகழ்ச்சி நடைபெற்றது.

தாப்பா நாடாளுமன்ற உறுப்பினரும், நகர்ப்புற நலவாழ்வுத்துறைத் துணை அமைச்சருமான டத்தோ.மு.சரவணன் அவர்கள் தலைமையில் தாப்பா தொகுதி தலைவர் டத்தோ டாக்டர் மு.பாலசிங்கன் அவர்கள் முன்னிலையில் நாங்கள் (தென்மொழி மா.பூங்குன்றன், மறை.தி.தாயுமானவன்) உரையாற்றினோம். தனித்தமிழின் தேவைகள், எதிர்காலத் தமிழின் காப்புகள், தமிழினத்தின் அடையாளங்களும் அதனைக்காக்க வேண்டிய தேவைகளும், இற்றைத் தமிழகத்தின் இழிநிலைகள்பற்றி நாம் உரையாற்றினோம்.

அடுத்து மறை.தி.தாயுமானவன், மறைமலையடிகளாரின் பன்மொழிப் புலமையும், திறமையும், சிறந்த பிறமொழி இலக்கிய நூல்களைத் தமிழுக்கு மொழியாக்கம் செய்தமை, அடிகளாரின் தனித்தமிழ்த் தாக்கம், தமிழறிஞர்கள் முன்னெடுத்துச் செல்ல கரணியம் என்ற பொருள்களில் சிறப்பானதொரு உரையாற்றினார்.

மகளிர் மிகுதியாகக் கலந்துகொண்டதாலும் அந்நிகழ்ச்சியில் அமைச்சர் கலந்து கொண்டதாலும் பலரும் வருகைதந்து அரங்கு நிறைந்து நிகழ்ச்சியைச் செறிவுள்ளதாக ஆக்கியது. இரவு உணவுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது.

## கேமரான் மலையுச்சி நகர நிகழ்ச்சி

13.03.2013 அன்று கேமரான் மலையின் உச்சி நகரத்தில் கலந்துரையாடல் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டது.

கேமரான் மலையென்பது உதகை போன்றதொரு தேயிலைப்பயிர் விளையும் மலை. தேயிலையுடன் பல்வகை மலர்கள், கனிகளும் விளைவிக்கப் பெறுகின்றன. இயற்கையெழில் கொஞ்சும் மலை இரவிலும் மலர் மொட்டுகளுக்காக ஆங்காங்கு விளக்குப் பந்தல்களாக அமைக்கப்பட்டு அம்மலையே ஒளிர்கிறது.

**திருவள்ளுவர் நன்னெறி மன்றம்** எனத் தமிழன்பர்கள் ஒன்றிணைந்த அமைப்பு. அதன் பொறுப்பாளர் **நாச்செல்.அமைச்சியப்பன்** தென்மொழிபால் ஈடுபாடுடையவர். பாவலரேறு ஐயாவிடம் பற்று கொண்டவர். அவர், வேறு ஒருநாள் அமையவிருந்த திருவள்ளுவர் நன்னெறி மன்றச் செயற்குழுக் கூட்டத்தை நம் வருகையை முன்னிட்டு 13.03.2013 அன்று மாலையே கூட்டியிருந்தார். நூறுபேர் அளவில் கூடியிருந்த அக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக நாம் அறிமுகப்படுத்தப்பட்டோம்.



திருவள்ளுவர் நன்னெறி மன்றத்தினரும் அதன் பொருப்பாளர் நாச்செல்.அமைச்சியப்பனும் தமிழக விருந்தினர்களுடன்

நாம் நம்முடைய செயற்பாடு, குறிக்கோள், மலையகம் வந்ததன் நோக்கம் ஆகியவற்றை விளக்கிக்கூறி, தென்மொழி இதழை அங்குக் குழுமியிருந்தோருக்கு அறிமுகப்படுத்தினோம். ஆர்வத்துடன் தொகைகொடுத்து இதழ்களைப் பெற்றுக்கொண்டு மகிழ்ச்சியுடன் பாராட்டினர்.

நள்ளிரவுப் பொழுதில் மலைப்பாதை வழியே மலையிலிருந்து இறங்குவது புதிய பட்டறிவாக இருந்தது. தங்கியிருந்த இடத்திற்கு வருவதற்கு இரவு நெடுநேரமாகிவிட்டது.

## பத்து காசா தமிழ்ப்பள்ளி

14.03.2013 அன்று ஈப்போவிற்குச் சற்று தொலைவிலுள்ள பத்துகாசா ஊரின் தமிழ்ப்பள்ளியில் காலை 10.00 மணியளவில் நிகழ்ச்சி ஏற்பாடாகியிருந்தது.

காலை 8.00 மணிக்கே புறப்பட்டுச் சென்றோம். பெரிய சுற்றடைப்பில் அமைந்த பெரியதொரு அரசுப் பள்ளி. அப்பள்ளியின் வாயிலில் அமைந்த பள்ளிக் காவலகத்திற்குப் **'பாவலரேறு பெருஞ்சித்திரனார் காவலகம்'** என்று பெயரிட்டிருந்தனர்.

அடுத்து பள்ளியின் முன்பகுதியிலுள்ள மழலையர் பள்ளி இரு பிரிவுகளைக் கொண்டு இரண்டு சிறு கட்டடம். ஒன்றுக்கு **'பாவாணர் தமிழ்ப்பொழில்'**, மற்றொன்றுக்கு **'காமராசர் தமிழ்ப்பொழில்'** எனப் பெயரிடப் பெற்றிருந்தது. தவிர ஒவ்வொரு வகுப்பறைப் பிரிவுக்கும் தமிழறிஞர்கள் பெயர்களைப் பொறித்திருந்தனர். அப் பள்ளியின் தலைமை




ஆசிரியர் திரு.கருப்பையா அவர்கள், தென்மொழி யின்பால் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். தமிழறிஞர் படங்களை வரிசைப்படுத்தி யிருந்தார். அவற்றில் மறைமலை யடிகள், பாவாணர், பாவலரேறு ஆகிய தமிழறிஞர்களில் யாருமே விடுபாடு இல்லை. உலக அளவில் அருவினை யாற்றிய தமிழர்களை வரிசைப்படுத்தி பள்ளிப் பிள்ளை கள் எளிதாகக் காணும் உயரத்தில் பார்வைக்கு வைத்திருந்தார். படவரிசையின் இறுதியாக எதிர்காலத்தில் உள்ள அருவினையாளர் என்று ஒரு சட்டகத்தில் முகம் பார்க்கும் கண்ணாடியை மட்டும் பொருத்தியிருந்தார். மாணவர்கள் அதைக்காணும்போது தங்கள் முகம் அதில் தெரியும்படி பதிக்கப்பட்டி ருந்தது. தாங்களும் அருவினை யாளர் பட்டியலில் இடம்பெற வேண்டும் என்ற உணர்வைத் தூண்டும் என்பது தலைமை




யாசிரியரான அப்பெருந்தகையாளர் திரு.கருப்பையா அவர்களின் நோக்கம்.மிகப்பெருஞ்செயல் மாந்தரான அவரின் நோக்கமும் அவ்வாறே இருந்தது. பள்ளியில் ஒழுக்கம் மிகுந்து இருந்தது.

'பாவாணர் தமிழ்ப்பொழில்' என்ற பெயரிட்ட கட்டடத்தில் பிஞ்சுக் குழந்தைகள் சீருடையில் வட்டமான மிசைகளில் அமர்ந்தி ருந்தனர். வட்டமான மிசை ஆறு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் அமர வேண்டிய குழந்தையின் படங்கள் ஒட்டியிருந்தன. அது குழந்தைகளின் படிப்பறை. அதேபோல் உணவு அறையிலும் நீளமிசையில் குழந்தைகளின் படம் பதித்த இட ஒதுக்கீடு. அருமையான உணவு அணியப்படுத்தப்பட்டிருந்தது. அடுத்து ஓய்வறை. இவ்வாறு கண்கொள்ளாக் காட்சியாக அக் குழந்தைகளின் மலர்க் கூட்டத்தைக் கண்டு மகிழ்ந்தோம்.

தூய்மையான பூங்காவிற்குள் அமைந்துள்ள அப் பள்ளியில் நுழைந்த மாத்திரத்தில் எந்தப் பெற்றோர்க்கும் தம் குழந்தைகளை அதில் சேர்த்துவிட ஆர்வம் வரும். அப்பள்ளியின் கட்டட நேர்த்தியையும் கல்வி பயிலும் பிள்ளைகளின் ஒழுக்கச்சீர்த்தியையும் கண்டவுடன் மனம் ஒன்றிப்போகும். அதைச் சுற்றிப்பார்த்த மட்டிலே தமிழுணர்வு தானே பதிந்துவிடும்.

அங்குள்ள பள்ளி மண்டகத்தில் குழந்தை களுக்குப் பேருரை நிகழ்த்துவதை ஒரு நல்வாய்ப் பாகவே நாம் கருதினோம். வெளிநாட்டுத் தமிழ்க் குழந்தைகளோடு அளவளாவி வந்தது நமக்கு மனநிறைவைத் தந்தது. அக்குழந்தைகளுக்குத் தகுந்தாற்போல் இறங்கி அவர்களுக்குத் தக உரையாற்றி வந்தோம். அவ்வாறே திரு.மறை.தி.தாயுமானவன் அவர்களும் சிறந்ததொரு உரையாற்றி வந்தார்.

அக்கூட்டத்தில் நம்மைப் பாவலர் வீரக்குமரனார் அறிமுகம் செய்விக்க, தலைமை யாசிரியரும் உள்ளூர் அரசியல் தலைவர்களும் சிறப்பான வரவேற்பு கொடுத்தனர்.

பள்ளிக்கூட்டம் முடிந்ததோடு அருகில் இருந்த பாவலர் வீரக்குமரனார் இல்லத்திற்குச் சென்றோம். அவர்களின் இனிய தமிழ்க்குடும்பத்தாரோடு அளவளாவி னோம். பெயரக்குழந்தைகளின் தமிழ்க்கல்வி பெற்ற அறிவுப்பேச்சில் மகிழ்ந்தோம். நம்முடனேயே தொடர்ந்துவந்த பள்ளித் தலைமையாசிரியர் திரு.கருப்பையா அவர்கள் அருகிலுள்ள பழைய ஈயச்சுரங்கத்திற்கு அழைத்துச் சென்றார்.

வெள்ளீயம் தோண்டும் கப்பல் ஒன்று அதன் செயற்பாடு நிறுத்தப்பட்டதுடன் அங்குக் காட்சிக்காகக் கிடப்பிலேயே இருந்தது. பெரிய நீர்த்தேக்கத்தில் அக்கப்பலின் உள்சென்று பார்வையிட்டு வந்தோம். வெளிநாட்டினர் மலேசியா வந்ததற்குக் காரணமே அந்த ஈயச்சுரங்கம்தான் என்று தலைமையாசிரியர் விளக்கிக்கூறினார். மேலும் நாங்கள் தங்கியிருந்த அறைவரை வந்து உரையாடிவிட்டு விடைபெற்றார்.

அடுத்த நாள் ஒரு கூட்டம் அமையவிருந்து, உள்ளூர் அரசியல் பணிகளால் அது தள்ளிப்போய்விட்டதால் அது வாய்க்கப்பெறவில்லை. ஈப்போவிலிருந்து சிங்கை கிளம்பவேண்டியிருந்தது. எனவே வழியனுப்பல் கூட்டம் ஏற்பாடாயிற்று.

## வழியனுப்பல் கூட்டம்

ஈப்போ நிகழ்ச்சிகள் முடிவுற்று, அடுத்த நாள் சிங்கைக்குப் புறப்பட இருந்ததால் 14.03.2013 மாலை வழியனுப்பல் கூட்டத்தை ஒரு விடுதியில் ஏற்பாடு செய்திருந்தனர்.

அக்கூட்டத்தை முத்தமிழ்ப் பாவலர் மன்றச் செயலாளர் பாவலர் அருள் ஆறுமுகம் அவர்கள் ஏற்பாடு செய்து அனைவரையும் வரவேற்று இனிய விருந்தளித்து அன்பு காட்டி நெகிழவைத்தார். அக்கூட்டத்தில் பாவலர் எல்லோன், பாவலர் முத்துப்பாண்டியனார், பாவலர் வீரக்குமரனார், பாவலர் முல்லைச்செல்வன், பாவலர் கம்பார் கனிமொழி இணையர், பாவலர் கூத்தரசன் உள்ளிட்ட பாவலர் பெருமக்கள் பலரும் தமிழன்பர்களும் கலந்து கொண்டனர்.

முத்தமிழ்ப் பாவலர் மன்றத்தின் ஏற்பாட்டுக் கூட்டங்களில் கலந்துகொண்டு உரையாற்றிய நமக்கும் திரு மறை.தி.தாயுமானவன் அவர்களுக்கும் முறையே 'தமிழவேள்' 'தனித்தமிழ்க்குரிசில்' என்ற விருதுகள் பொறித்த பட்டயங்கள், பரிசில்கள் கொடுத்து, இனிய விருந்தளிந்து அன்புடன் வாழ்த்தி வழியனுப்பல் செய்தனர்.

அங்குத் தங்கியிருந்த காலத்து அறிஞர் திருச்செல்வம், முருகையன் போன்ற அரிய அறிஞர்களையும் சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டது.

## சிங்கையில் இலக்கியக் கூட்டம்

மறை.தி.தாயுமானவன் அவர்களின் உறவினரும் சிங்கைத் தமிழ் அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளருமான திரு.செல்வகுரு – பூரணி இணையர் எங்களைச் சிங்கை நகரில் வரவேற்றனர். அடிகளாரின் குடும்ப வழிவந்த அவர்கள் சிங்கையைச் சுற்றிக்காட்டுவதற்கும், பலரையும் தொடர்பு கொள்வதற்கும் நாம் தங்குவதற்கும் பெரிதும் துணையிருந்தனர். அவர்களை நன்றியோடு எண்ணுகிறோம்.

17.03.2013 அன்று மாலை தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழக ஏற்பாட்டில் 'தனித்தமிழ் அறிஞர் பங்குபெறும் இலக்கியக் கலந்துரையாடல்' என்று சிங்கைத் 'தமிழ் முரசு' நாளிதழில் அறிவிப்பு விளம்பரம் செய்யப்பெற்றிருந்தது.

அதேபோல் 17.03.2013 அன்று மாலை 6.00 மணிக்கு சிங்கை, பிட்டி சாலையில் சிண்டா அரங்கில் பெரியதொரு கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.



அன்பர்களான பாத்தேறல் இளமாறன், பிச்சினிக்காடு இளங்கோவன் தொழுதூர் புலவர் அ.பொன்னையன், செல்வகுரு–பூரணி இணையர் எனப்பலரும் சிற்றரங்கில் நிறைந்து கலந்துகொண்டனர். தமிழ்மொழிப் பண்பாட்டுக் கழகச் செயலாளர் திரு.அரிகிருட்டிணன் தலைமையேற்று நிகழ்ச்சியை நடத்தினார். சிங்கைத் தமிழன்பர்களோடு மூன்று மணிநேரம் நிறைவான உரை நிகழ்த்திக் கலந்துரையாடியது மகிழ்வளித்தது. கனிச்சாறு நூல் தொகுதிகளும், மறைமலையடிகள் வரலாறு நூலும் மிகுந்த வரவேற்புடன் விற்பனையாயின.

தேநீர் விருந்துடன் கூடிய அந்நிகழ்ச்சியை முடித்துக்கொண்டு உடனே கோலாலம்பூர் புறப்பட வேண்டியவர்களானோம்.

## கோலாலம்பூரில் கனிச்சாறு நூல் அறிமுகக் கலந்துரையாடல் கூட்டம்

கோலாலம்பூர் நடுநகரில் அமைந்துள்ள 'துன்சம்பந்தன்' என்ற உயரிய கட்டடத்தில் அமைந்துள்ள சோம சிற்றரங்கில் மலேசியத் தமிழ் நெறிக்கழகத் தேசியத் தலைவர் திரு.திருமாவளவன் அவர்கள் தலைமையில் பாவலரேறு ஐயாவின் பாடல் தொகுதிகளான கனிச்சாறு நூல் அறிமுகக் கலந்துரையாடல் கூட்டம் நடைபெற்றது.



சிங்கை நடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்துக்கொண்டு வரவேற்ற முத்தமிழ் மன்றத் தலைவர் திரு.அரிகிருட்டிணன், திரு.செல்வகுரு – இணையருடன் திரு.கங்காசலம், தமிழக விருந்தினர்கள் மா.பூங்குன்றன், மறை.தி.தாயுமானவன் இணையர்கள்.

அதில் மலேசியத் தமிழ் இலக்கியக் கழகத்தின் பொறுப்பாளர் திரு.இராமன், அதன் பொதுச்செயலாளர் திரு.மா.கருப்பண்ணன் சாஆலம் தமிழ்க் கழகத்தின் தலைவர் பாவலர் சீரியநாதன், தமிழ் நெஞ்சர் அரசேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியை அம்பாங்கு சுப்பிரமணியனார் ஒருங்கிணைந்து சிறப்பாக நடத்தித் தந்தார் . மலேசியத் தமிழ் நெறிக்கழகத் தேசியத் தலைவர் திரு.க.திருமாவளவன் அவர்கள் பாவலரேறு அவர்களின் பாடல் சிறப்புகளையும் கனிச்சாறு பாடல் தொகுதிகளின் சிறப்புகளையும் எடுத்துக்கூறி சுவையானதொரு அறிமுக உரையாற்றினார். மலேசியத் தேர்தல் நெருங்கிவருவதால் பாவலரேறு ஐயாவின் அஞ்சல்தலை வெளியிடுவது பின்னர் விரைவில் நிகழும் என்றும் அறிவித்தார்.

குறைவான கனிச்சாறு நூல் தொகுதிகளே இருப்பு இருந்ததால் அறிமுகம் செய்த சிறிது நேரத்திலேயே அனைத்தும் விற்பனையாகின.

சிங்கை மலையகச் செலவை மகிழ்வோடு நிறைவு செய்தோம். அடுத்த நாளான 19.03.2013 அன்று பகல் சென்னைக்குப் புறப்பட்டோம்.




கோலாலம்பூர் துன் சம்பந்தன் – சோம அரங்கில் கனிச்சாறு நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில்
திரு.க.திருமாவளவன் நூல் வெளியிட, பெறுபவர் அம்பாங்கு சுப்பிரமணியம்
உடனிருப்போர் மறை.தி.தாயுமானவன், மா.பூங்குன்றன், பாவலர் சீரியநாதன்.

இந்த முறை சிங்கை மலையகச் செலவில் அடிகளாரின் பெயரனும், என்றும் நம் அன்புக்கும் மதிப்புக்குமுரிய பேரா.மறை.திருநாவுக்கரசு அவர்கள் மகனுமான மறை.தி.தாயுமானவன் அவர்கள் இணையராக உடன் வந்து கலந்துகொண்டதை மகிழ்வாக எண்ணுகிறோம்.

திரு.தாயுமானவன் அவர்கள் மறைமலையடிகள் அறக்கட்டளையைத் தொடங்கி அடிகளாரின் இல்லத்தைப் பேணும் பணிமுதல் அடிகளார் வரலாற்று நூலை மீண்டும் வெளிக்கொணரவும் பணியாற்றிக் கொண்டுள்ளார். அடிகளாரின் பிறங்கடையினரில் இப்போது தனித்தமிழுக்காகப் பாடுபட இவர் ஒருவரே முன்வந்துள்ளார் என்ற வகையில் அவரின் சிங்கை மலையகச் செலவு தமிழுக்கு ஆக்கமானது என்றே கருதுகிறோம். வரவேற்கிறோம்.





கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே!

மொழி, இன, நாடு எனும்
மூவுரக் கொள்கையை முனைப்புடன் முழங்கிட...

அறிவியல் செய்திகள், அறிஞர்கள் ஆய்வுகள்,
இளைஞர்கள் எழுச்சிகள், சிறுவர் மலர்ச்சிகள்
– என பல்துறைப் படைப்புகளோடும்,
அதிக பக்கங்களோடு அழகிய வடிவமைப்பிலும்,
புதிய பொலிவுடன் புதிய வலிவுடன்
வெளிவரவிருக்கிறது

# தென்மொழி

“தென்மொழியை, கண்ணொளியை, மூச்சுயிர்ப்பைச் சாகும்வரை
தேர்ந்தஉயிர்த் தொண்டெனவே ஆற்றிவருவேன் - வாழ்வு
தீர்ந்துவிடின் வேற்றுடலம் மாற்றி வருவேன்!”

– என்ற பாவலரேறு அவர்களின்
மொழி, இன, நாடு எனும்
முனைப்பு வேட்கைக் களமான
தென்மொழியைப் பயிலவும் பரப்பவும்
முழுமையாய்ப் பணியாற்றுவோம் !

முழு விளக்கங்களும் அடுத்த இதழில்

தென்மொழி ஆசிரியர்க் குழுவினர்.



ஈப்போ முத்தமிழ்ப் பாவலர் மன்றச் செயலர் பாவலர் அருள் ஆறுமுகம் அவர்களுடன்



அறிஞர் இரா. திருச்செல்வம் அவர்கள் இணையராக வந்து சந்தித்தபோது



ஈப்போ நிகழ்ச்சிகள் நிறைவடைந்தபின் முத்தமிழ்ப் பாவலர் மன்றம் ஏற்பாடு செய்து
விருதளித்து வழியனுப்பிய விழாவில் பாவலர்களுடன்



கோலாலும்பூரில் நடந்த கனிச்சாறு நூல் வெளியீட்டு விழா முடிவில் தமிழன்பர்களுடன்

Printed, Published and Owned by M.Poongundran and Printed at J.M.Process,22/44 Subhedar Hussain Street, Border Thottam, Rayapettai,Chennai-600014 and Published at 24 Telephone Qtrs. IInd Main Road, C I T Nagar, Chennai 35. Editor: M.Poongundran